[illegible]

[illegible]

[illegible]



ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

திருவரங்கச்சந்நிதிமுறை.

காவேரியின்மத்தியில் அரங்கமாநகரத்தில் வைகுண்ட
விமானத்தில் திருமகள் நிலமகள் சமேதராயும்
விபீஷணாழ்வார் கவரிவீசவும் நாரதமகா
முனிவர் யாழ்வாசிக்கவும் ஆயிரம்ப
ணாமுடியை யுடைய சேஷசயன
த்தின்கண் அரிய நித்திரை
செய்கின்ற கார்வண்ண
சொரூபியாகிய

ஸ்ரீரங்கநாயகர் திருவருள்பெற்று
அரியக்குடியில் மடங்கட்டிவசிக்கின்ற
நமசிவாயநாவலர்பாடியது.

இஃது
சென்னைப்புரசை
நாராயணசாமிப்பிள்ளையவர்களது
நற்றமிழ்விலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1910. [அணா-2.

16, சரவணப்பெருமாள் முதலிவீதி,
புரசை, சென்னை.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

அவையடக்கம்.

ஜெயமாகவாழு மெழுவகைத்தோற்றமுஞ் சித்திரத்தில்
நயமாயெழுதத் துணிந்ததைப்போலரி நாரணன்மேற்
சுயமாயுரைத்த துதித்தமிழ்மாலையைத் தொல்லுலகிற்
றயவாப்பரிந்தருண் மேலோர்திருவடித் தாட்டுணையே.

கடல்கிழக்குத்தெற்கு கரைபுரளும்வெள்ளாறு
குடதிசையிற்கோட்டைக் கரையும்-வடதிசையில்
வளைநாட்டுப்பண்ணை யிருபத்துநாற்காதஞ்
சோளநாட்டெல்லையெனச் சொல்.

இவ்விதமாகச் சொல்லப்பட்ட சோழவளநாட்டுக்குள்ளான புதுக்கோட்டை யென்னுஞ் சமஸ்தானத்தில் சற்றேரக்குறைய (௯0) வருடத்துக்குள்ளாக பிரதானிக்கஞ் செய்திருந்த தக்ஷணத்துவேளாளன் குலத்திலகராகியும், சிவபூசை சிவார்ச்சனை சிவபத்தி சிவனடியார்நேசவிசுவாசஞ் சிறந்தவராகியும், விளங்காநின்ற ஸ்ரீமது வைகுந்தம் பிள்ளையினுடைய நல்வினைப்பயனால் மிகுந்த சந்ததியான தானப்பிள்ளையினது மரபிற்றோன்றிய பொன்னம்பலம் பிள்ளையின் நன்னயபுத்திரராயும், ஸ்ரீரங்கநாதருடைய அனுக்கிரகம் பெற்று (௪௰) வயது சென்று இப்போது அரியக்குடியில் மடங்கட்டி அந்தமடத்தில் வசிக்கின்ற சுத்தப்பிரமச் சைதன்யமுடைய நமசிவாயனென்னும் நற்பெயர்பூண்டநாவலன் பாடிய இத்திருவரங்கச்சந்நிதிமுறையையாவரு மெளிதிலுணரும்பொருட்டுகளத்தூர் தமிழ்ப்புலவர் வேதகிரி முதலியார் குமாரர் ஆறுமுகமுதலியாரால் பிழையறப்பரிசோதித்து நிறைவேறியது.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

கார்வண்ணமாலை.

காப்பு.

சீர்மேவியராம கதைதனை முப்பது செந்தமிழால்
பார்மேல்விலங்கவிக் கார்வண்ணமாலைப் பநுவல்சொல்ல
தார்மேவுமேரு வில்வாங்கியசக்கர சத்தியருள்
கார்மேனியைங்கர மும்மதத்தோன்பதங் காப்பதுவே.

தேவருமேலவர் தீங்கினைக்கூறச் சிவனயன்மால்
மூவருங்கூடி யிராவணனுவி முடிபபதற்கு
மேவுந்தசரதப் புத்திரனாக விளங்கவந்த
காவலனேநித மென்தனைக்காத்தருள் கார்வண்ணனே. (௧)

முந்தவயோத்தியிற் றம்பியர்மூவர் முறைமுயங்கத்
தந்தையின்சொற்படி கோசிகனுக்குத் தவத்துணையாய்
சிந்தைமகிழ்ந்திடத் தாடகைதன்னைச் சிரமறுத்த
கந்தமலர்ப்பத னேயெனைக்காத்தருள் கார்வண்ணனே. (௨)

வலியானகோசிகன் பின்னேநடந்து வரும்வழியில்
கிலியாமகலிகை சாபமுந்தீர்ந்துக் கிரியைசெய்து
சலியாமல்வில்லை தான்வளைத்தன்று சானகியைக்
கலியாணஞ்செய்த வபிராமாகாத்தருள் கார்வண்ணனே. (௩)

சௌரியம்பேசி நின்றந்தைமுன்வந்த பநுவலனை
அவஜயமாக்கி பரதனைக்கேகய நாடனுப்பி
நவமணிமாட நகர்புகுந்தேமுடி நாட்டுதற்காங்
கௌசலபுத்திர னேயெனைக்காத்தருள் கார்வண்ணனே. (௪)

வைணவயுமெய்திடு முண்டையினனு மனவெறுப்பாஞ்
செய்கைகள்கூனி கலைத்திடப்பார்த்திபன் தேம்பவாம்
உய்கையிலாள்மகன் பாராளக்காட்டி னினைவிடுத்த
கைதனைப்பணிந் தேயெனைக்காத்தருள் கார்வண்ணனே. (௫)

லங்கைமணத்தனங் கைகேசியீந்த மரவுரியுஞ்
செங்கையிலேந்திய வில்லுடன் றம்பியுந் தேவியுமாய்
பங்கயம்போன்முகங் கொண்டுசென்றேகுகன் பண்புடன்
கங்கைகடந்தவ னேயெனைக்காத்தருள் கார்வண்ணனே. (௬)

நாட்டியகோசலை நாட்டைப்பரதற்கு நன்மகுடஞ்
சூட்டித்திருமுடி பாதுகையீந்து சுகமுடனே
தாட்டிகமாகிய தம்பியுந்தானுஞ் சானகியுடன்
காட்டில்நடந்தவ னேயெனைக்காத்தருள் கார்வண்ணனே. (௭)

பழுதுசெய்தேவந்த பாவிவிராதன் பணிந்துனடி
தொழுதிடும்வேதவன் றுன்பத்தைநீக்கித் துயரிலுழன்
றழுதபயோமெனு மந்தணர்க்காசி யளித்தளிசேர்
கழுகிடஞ்சென்றவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. (௮)

வஞ்சனென்றன்பறை செய்துசடாயு வனந்தனின்மா
சஞ்சலந்தீர்வுற மூவரும்பன்னக சாலையுற்று
பஞ்சவடியி லரக்கர்வரும்வினைப் பார்த்திருந்த
கஞ்சமலர்ப்பத னேயெனைக்காத்தருள் கார்வண்ணனே. (௯)

நாரியென்றேவந்த சூர்ப்பநகையெனும் ராட்சசியைக்
கூறியவாள்கொண்டு மூக்கையுங்காதையுங் கொய்கிளையோன்
வீரியமாக வுனைத்தொழுதேத்த விழைந்திஃதே
காரியமென்றவ னேயெனைக்காத்தருள் கார்வண்ணனே. (௧௦)

துரந்தரனாகிய ராவணன்தம்பியுந் தூதனுடன்
சிரந்தொடுதேர்பரி யானைபதாதி தைத்தியரும்
நிரந்தரமாக முகூர்த்தத்தின்மாள நெடுஞ்சிலையாய்
கரன்றனைவென்றவன் யெனைக்காத்தருள் கார்வண்ணனே. (௧௧)

நிலைபோலிராவணன் றங்கையின்பேச்சை நிசமென்றெண்ணி
மலையாமாரீசனை மானுருவாக்கி வனத்தனுப்ப
சிலைபோல்விழிநுதற் சீதையின்சொற்படி சென்றுவில்லான்
கலைமானையெய்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. (௧௨)

துலங்கியகாட்டி லிலக்குமணன்செலத் தட்டகுணத்
திலங்கியராவணன் சீதையைத்தேர்மேற் கொண்டெடுத்திடமா
விலங்கினம்பட்சிகள் விண்ணோடுபூமியு மெய்யுருகக்
கலங்கிமலைத்தவ னேயெனைக்காத்தருள் கார்வண்ணனே. (௧௩)

சிவந்திருகண்களுந் தீயெழத்தாக்கிச் சிரசிறப்பார்
கவிந்துறுதீரச் சடாயுவைக்கண்டு கலுழ்ந்துருகி

தவந்தருதீக்கடன் செய்துமுடித்துநற் றம்பியுடன்
கவந்தனைவென் றவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. (௧௪)

சவுரியைக்கண்டு தருங்கனியுண்டு தயவுடன்பா
லுவரியிற்பாய லுருவாங்கனிட்ட னுடன்பம்பையிற்
சிவனுருவான வனுமானைக்கண்டு தெளிந்துமனக்
கவலையுரைத்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. (௧௫)

திண்புயமேரு சுக்கிரீவன்வணங்கச் செயமெனவே
பண்புகொண்டேழு மராமரமெய்து நசிந்தவென்பை
விண்புதக்கால்கொண் டெறிந்துமுன்சீதை வெறுத்தபணி
கண்புகக்கண்டவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. (௧௬)

வாணுண்மிகுத்திடு தாரகையோடணி மாநகருக்
கோணுமற்கைவச மாக்கியுந்தம்பியைத் தூஷணித்த
வீணுங்கொடுமை விறன்வாலியைக்கொல்ல வில்லிலம்பைக்
காணுமலெய்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. (௧௭)

பார்மீதுவாலியைக் கொன்றுசுக்ரீவன் பதிக்கரசாய்
சீர்மேவுகிட்கிந்தை ராச்சியபாலனஞ் செய்யெனத்தேன்
தார்மேவுகாட்டின் மதங்கவலையினிற் றம்பியுடன்
கார்காலங்கண்டிருந் தோயெனைக்காத்தருள் கார்வண்ணனே. (௧௮)

துணையானபக்குவச் சுக்ரீவன்வாழ்த்தித் தொழுதிடப்பே
ரணையானவானரச் சேனைகணாற்றிசை யாகவென்ன
இணையானதென் றிசைக் கேகனுமான்ற னிருகரத்திற்
கணையாழியீந்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. (௧௯)

வண்டுகுயிற்கிள்ளை பாடுமசோக வனந்தனிற்றன்
விண்டுவின்மோதிரஞ் சென்றீந்துசீதை விளம்புமொழி
கொண்டுவந்தேனென் சூடாமணியைக் கொடுத்திடக்கண்
கண்டுமகிழ்ந்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. (௨௦)

தருணமிதென்று சான்புக்கிவீடணன் சூழ்ந்தொழில்சேர்
மருமலர்ச்சாத்தியுன் பாதாரவிந்தம் வணங்கிநான்
பருதிமதிநதி பாருள்ளமட்டும் பதிக்கரசாய்க்
கருணைபுரிந்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. (௨௧)

இடமானசற்ப சயனத்தினீயு மோரேழுதினம்
திடமானசெய்தி சமுத்திராசன் றெறிந்துதொழ
அடைவானவானரச் சேனையைக்கூட்டி யகலநெடுங்
கடல்வாயடைந்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. (௨௨)

துவசக்கொள்சேனை யிலங்கையிற்சண்டை தொடுத்திடக்கால்
கவரியசைத்திடக் கட்டியங்கூறக் கனகமலைக்
குவரியதான மணித்தேரிலுற்றிடுமிராவணனைக்
கவசமறுத்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. (உ௩)

சொர்ணமுற்றோங்கிய தேரோடுராட்சதர் தூளிசெய்து
வர்ணமதாமுதி ரப்பெருக்கோடிட வானவர்கள்
நிர்ணயமாயுனக் காசிவிளம்ப நிட்டூரகும்ப
கர்ணனைக்கொன்றவ னேயெனைக்காத்தருள் கார்வண்ணனே (உ௪)

சிவந்தவரக்கனை யிந்திரசித்தன் செலுத்துமுனை
முனைந்தவராவி யழியாமற்காக்க முறையுடன்சீர்
நினைந்துகருடனும் வந்துவணங்கியே நேரின்மனங்
கனிந்துரைசெய்தவ னேயெனைக்காத்தருள் கார்வண்ணனே. (உ௫)

விண்டலம்பூமியும் வேசனும்வேந்தனும் விண்ணவருஞ்
சண்டனுங்கண்டு மனந்தளர்காலையிற் சஞ்சீவியைக்
கொண்டனுமான்வந் துயிர்தரக்கோகுலக் கூத்தினைக்கண்
கண்டருள்விண்டவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. (உ௬)

பொய்மாய்கையாகம் புரிந்திடுமிந்திரச் சித்தனுரம்
மெய்சோர்ந்துயிர்கெடச் செந்தழல்வாளி விடுத்தனிங்
கொய்வாதயனத் தம்பிமேலன்புகொண் டெழிற்கோலர்க்
கைவாளியீந்தவ னேயெனைக்காத்தருள் கார்வண்ணனே. (உ௭)

மிண்டனிராவணன் கூட்டியமூல பலத்தைவின்மேல்
அண்டருங்கண்டு மழிந்துய்யவோமோ கனக்கணையாற்
றுண்டமதாகத் துகள்போக்கிராவண தூர்த்தனையுங்
கண்டமறுத்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. (உ௮)

இனிதானசீதை சிறைநீக்கியண்ட ரிடர்போக்கிமேற்
றனியாமிலங்கை விபீஷணர்காக்கித் தனுக்கோடிசென்
றுனிதாமுனிவனங் கண்டுஜெயஞ்சொல்லி யும்பர்மகிழ்
கனியாமுதுண்ட னேயெனைக்காத்தருள் கார்வண்ணனே. (உ௯)

இராச்சியங்காக்கின்ற ராசாதிராசர்க்கும் நான்முகற்கும்
பூச்சொரிவானவர் மாதவர்தம்பியர் பொன்மணிக்கும்
தாட்சியில்லாமல் வசிஷ்டர்கையான்முடி தாங்கிச்சுகங்
காட்சிகொடுத்தவ னேயெனைக்கார்த்தருள் கார்வண்ணனே. (௩௰)

கார்வண்ணமாலை-முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

அரங்கப்பத்து.

இருவினைப்பயனாலிந்த யிகத்தினிலிறந்திடாமல்
மருமலரெடுத்துவந்துன் மலரடிபூசைசெய்தேன்
சருமுதற்போக்கிநின்பொற் கழலிணையளித்தாட்கொள்ளும்
அருமறைப்பொருளதான வரங்கமாநகருளானே. (௧)
மாயையும்பிறவிநோயும் வல்வினையானதீங்கும்
நாயெனைத்தொடர்ந்திடாமல் நானுனக்கடிமையானேன்
சேயெனக்கிப்போதுந்தன் றிருவருளளித்தாட்கொள்ளும்
ஆயனேயமரர்போற்று மரங்கமாநகருளானே. (௨)
மாதர்தம்வலையிற்சிக்கி மயங்கியேபிறவிநோயால்
பூதலத்தலைந்திடாமற் பொற்பாதம்போற்றிசெய்தேன்
சீதரமுகுந்தாவுந்தன் றிருவருளளித்தாட்கொள்ளும்
ஆதியேயமரர்போற்று மரங்கமாநகருளானே. (௩)
மடமயிலென்னுமின்னார் வழிதரும்பிறவிநோயால்
சடமுருவெடுத்திடாமற் றமியனானுந்தன்பாதம்
திடமதாய்ப்போற்றிசெய்தேன் றிருவருளளித்தாட்கொள்ளும்
அடமகன்றமரர்போற்று மரங்கமாநகருளானே. (௪)
மண்டலந்தன்னிற்பந்நாள் வளர்ந்திடும்பிறவிநோயாற்
சண்டன்வந்தெனைத்தொடாமற் றமியனுன்னம்பொற்றாளை
தெண்டனிட்டுருகிநைந்தேன் றிருவருளளித்தாட்கொள்ளும்
அண்டர்கள்பணியுங்கோவே யரங்கமாநகருளானே. (௫)
வஞ்சனையானசூது மாயையும்பிறவிநோயும்
எஞ்சியவெனைத்தொடாம லிணைமலர்ப்பதம்பணிந்தேன்
செஞ்சிலைவளைத்தராமா திருவருளளித்தாட்கொள்ளும்
அஞ்சினேனென்னைக்காப்பா யரங்கமாநகருளானே. (௬)
இத்தலந்தன்னிற்சன்ம மெடுத்தெடுத்தலுத்தோயாமல்
நித்தமுமுந்தன்பாத நினைவினாற்போற்றிசெய்தேன்
சித்தமதிரங்கிநின்றன் றிருவருளளித்தாட்கொள்ளும்
அத்தனேயென்னைக்காப்பா யரங்கமாநகருளானே. (௭)
கயலிணைவிழியார்தங்கள் கவடெனும்வலையிற்சிக்கி
நயனநீர்சொரிந்துமல்க நானுனக்கடிமையானேன்
ஜெயமதாயெனக்கிப்போதுன் றிருவருளளித்தாட்கொள்ளும்
அயன்முதலமரர்போற்று மரங்கமாநகருளானே. (௮)

பொய்யெனுஞ்சபலந்தன்னைப் போற்றியேபுகழ்ந்துநித்தந்
தையலர்வலையால்சிக்கி தயங்கிநான்மயங்கிடாமல்
செய்யனேயெனக்கிப்போதுன் றிருவருளளித்தாட்கொள்ளும்
ஐயனேயமரர்போற்று மரங்கமாநகருளானே. (௯)
ஊருநீபேருநீயெம் முறவுநீயறிவுநீயிப்
பாருநீயுயிர்கட்கெல்லாம் யடியளப்பவனுநீயித்
தேருநீயருளாலுந்தன் றிருவருளளித்தாட்கொள்ளும்
ஆருமற்றெற்குநீயே யரங்கமாநகருளானே (௧௦)
சன்னையுருமுருவாய்ச்செய்து யிருகையுமொந்தான்வேதன்
பின்னையுமெமனுவி பிடித்தெனைச்சலித்தான்பூமி
தன்னிலேகுருவாமூர்த்தி தானுரைத்திளைத்தானித்தம்
அன்னையுஞ்சுமந்தலுத்தா ளரங்கமாநகருளானே. (௧௧)

அரங்கப்பத்து-முற்றிற்று.

இரங்கப்பத்து.

பொருளேசுவையாநவரசமே புலனேபொறியேபுலநறியா
மருளேதனிமேவவனமலையே வளர்வேருறைவேமயங்குகின்ற
இருளேயொளியேகதிர்மதியே யிதமேபரமேயொளிலுரையும்
அருளேயமுதேகதிபெறவே யரங்காகொடியேற்கிறங்காயே. (௧)
இணையேதளர்வேவணங்குணாக்கு மிசைவேநிசமேயெனக்குவருந்
துணையேயறிவேமறைமொழியு சொல்லேபொருளேசுகமுடைத்தா
குணமேமனமேயருளுடைய குன்றேயமுதேநந்தனெனும்
அணமேற்றுயிலும்மணிவிளக்கே யரங்காவடியேற்கிறங்காயே. (௨)
உரமேபகையேயுடலுயிரே யூனேயுறவேயுறுதியுள்ளத்
திரமேதுதிப்போர்தமக்கிரங்குந் தேவேபிறவிப்பயமிருக்கும்
பரமேகதியேயெனக்கிறங்கும் பண்பேயிமையோர்பணியும்வினைக்
கரமேயமுதேகதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. (௩)
வளிவேன்றமியேன்மனத்துளி மயமேனிறைவந்திருநாமம்
தொழுவேன்வழுவாதிருகரத்தான் றுதிப்பேனுவாற்றுணையடிக்கீழ்
விழுவேனுய்யபதந்தெளியேன்விழுமேற்கண்ணீர்சொரிந்திடச்சேர்ந்
தழுதேனவர்க்கதிபெறவே யரங்காவடியேர்க்கிரங்காயே. (௪)
மெய்யாவினைகளொருகோடி அறியேன்செய்துமிருந்ததனால்
செயாகியதேவுனதுபத மேவாதிருந்தேன்வீணாய்

பொய்யா இயபேருடலதனைப் புகழ்ந்தேனழியாய்ப்பொருளெனவே
ஐயாவய்யா கதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. (ரு)

விரிவாகியபேருலகமதின் மேதாவியர்சொற்சாத்திரத்தை
பரிவாய்படித்தேன்பயனுணர்ந்து பதமேற்பணிந்தேன்பலன்பெறவே
குருவாய்நீவந்தெனதுகுறை குறையைத்தீர்த்தாள் குணமுடையாய்
அருவாய்வருவாய்கதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. (சு)

துன்பப்பிறவிக்கடலதனைத் தொலைத்தேநீந்திக்கரையேறி
இன்பப்பெருக்கானந்தவெள்ள வெளியேகருந்தற்கிரவுபகல்
தென்பற்றுன்றன்னிருநாமந் தினமேதுதித்தேன்சிற்றறிவால்
அன்பிற்கழுதேகதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. (எ)

குறியேன்கொடியார்மடியுறவைக் கொள்ளேன்வின்னேனொருநாளும்
பிரியேன்பெரியோர்தனைகண்டால் பிணங்கேன்வணங்கியிணங்கிடுவேன்
தரியேன்தமியேனுனதருளைத் தாராதொழிந்தாற்றாணிமிசை
அரியேவறியேன்கதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. (அ)

பழகேன்சிறியாரிணக்கமதைப் பாவந்தருமின்னார்தனைக்கண்
டிழகேனென்றனிருதயத்தி லெளியேனின்னைப்பிடித்தபிடி
நழுகேன்வழுகேன்கிருபைசெய்வாய் நாராயணனேவனமாரு
அழகேபுழுகுங்கதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. (கூ)

என்னாசையினாலிரவுபக லிதுவேதொழிலாயிளமுலையார்
தன்னால்மயங்கியறிவழிந்தேன் றாமோதரனேகிருபைசெய்வாய்
உன்னாலடியேனுலகுய்ய வுரைத்தேன்தமிழையொருடலந்தாய்
அன்னாள்முன்யானையைக்காத்த யரங்காவடியேற்கிரங்காயே. (ய)

இரங்கப்பத்து-முற்றிற்று.

மெய்ஞ்ஞானஜோதிமயம்.

காணாதுகாணவே மோகினியினுருவமாய்க்
 காசினியில்வருகவில்லையோ
கானகந்தனிலுனது பாததூள்சிந்தவே
 கருங்கல்பெண்ணாகவில்லையோ
தோணாதபோலவே கஞ்சனொடுபோரதஞ்
 சூக்ஷியின்முடியவில்லையோ

தொல்லுலகமியாவுமுன் னுந்தியிற்காணவே
ருத்திரம்விளைத்ததிலையோ
நாணுடல்கவுரியின் மூனற்பரியதாக்கியே
கரிதனைக்கொணரவிலையோ
நரசிங்கரூபமாய்க் கற்றூணிடைத்தோன்றி
நல்வினைவிளக்கவிலையோ
விஞ்ஞானவெண்மனம் பணியும்படிக்கருள்செய்
வித்தைகளுனக்கருமையோ
வேதாவையீன்றருள் சீதாபிராமனே
மெஞ்ஞானஜோதிமயமே. (௧)

ஆருறவுயாருதவி யாருதுணையாருபகை
யம்புவியிலெந்தனுக்கு
ஐம்புலனொடுக்கியே யுன்பதம்வணங்கவே
யறிவெனுந்தீபமேற்றி
சேருமிடமேயறிந்து தென்னைச்செறித்துலகில்
திவ்யசம்பன்னவாழ்வும்
தேசசமயங்களும் பலமனிதர்செய்கையுஞ்
சிந்தைதனில்யான்மறந்து
பாருலகிலுன்னிரு பதாம்புயத்தடிமையாய்
பண்பிற்பணிந்தேற்றவும்
பத்திவிசுவாசமாய் நம்புமடியேனிடைய
பழவினையொழித்தாளவும்
மேருநிகரானபுஜ கருடனூர்தேறியென்
விழிக்கெதிரெழுந்தருளுவாய்
வேதாவையீன்றருட் சீதாபிராமனே
மெஞ்ஞானஜோதிமயமே. (௨)

எவர்சிறியரெவர்பெரிய ரெவர்நிதியரெவர்மடிய
ரீவுள்ளமனிதரெவரோ
என்றுலகிலவரிடஞ் சென்றுறுதெண்ணிய
யிருளானபலநினைவினால்
தவறிலாத்தவமெனு முயர்ச்சியைத்தேடாமல்
சமுசாரசாகரத்தில்
சார்வதாகாலமும் மூழ்கிநிலைகொள்ளாது
தத்தளிப்பதுஞாயமோ

கலைதீதசோரவன மாலிகாபரணவரி
    காராயணா முகுந்தா
காததியர்பரவு தாமோதராவேத
    நாதாந்தபஞ்சாயுதா
விவரமுடனடிமையை யிரட்சிக்கவேகருடன்
    மீதேறியென்முன்வருவாய்
வேதாவையீன்றருட் சீதாபிராமனே
    மெஞ்ஞானஜோதிமயமே. (௯)

ஆனைமேகணிலும்வா லணிப்பிள்ளைகொம்பிலிடும்
    ஆமென்றபழமொழிகள்போல்
அங்குசீயுந்தமிய னிங்குமாங்கடலிடத்
    தலையுந்துரும்புபோலும்
ஊமைகண்டுவனையுறு சொற்பனம்போலுமே
    லொன்றுமுறையாமலடியேன்
உபயசெங்கமலபத நாடியுற்றதுவும்நீ
    யுண்மையுமுறைபாதகுறையும்
சீமையிற்சொலவிலோ யாவருநகைத்திடுவ
    ஸ்ரீராமராமராமா
தேகியெனபார்க்குதவி செய்யாதபேரில்லை
    திருமருவுசார்வபூமா
வீமாதகற்றியெனை ரட்சிக்கவேகருடன்
    மீதேறியென்முன்வருவாய்
வேதாவையீன்றருட் சீதாபிராமனே
    மெஞ்ஞானஜோதிமயமே. (௰)

மண்ணாசைபெண்ணாசை பொன்னாசைமூன்றையும்
    வாகருமணநோக்கவில்லை
வைகுண்டவாசனே நிறைதிருவடிக்கடியர்
    கைங்கர்யான்வாழ்த்துதற்கு
கண்ணாரவேதாரை தாரையாயோடிடக்
    கைகுவித்துனதுநாமக்
கனவின்பறைமண்முறை யோவெனக்கூவியுங்
    கருணைபுரியாதிருந்தால்
என்னைஞனக்குக ளுளடிமையாகுமே
    னினிப்பிறவிதீர்வதெப்போ
இரவுபகலுன்பெருமை யுன்மகிமையுன்னுமை
    மூண்ணாதிருந்ததுண்டோ
விண்ணாடாகமகிழ செங்கருடன்மீதேறி
    விழிகளிக்கிடவருகுவாய்
வேதாவையீன்றருட் சீதாபிராமனே
    மெஞ்ஞானஜோதிமயமே. (௧௧)

ஆசையெனுமகழியும் மோகவலையாமதிலும்
  அஞ்ஞானமிக்குரசரும்
ஆணவமலச்சேனை யனுகுதீவினையரசு
  யைம்புலனிலத்தின்மேவி
வரசமுடனம்பத மலர்க்கடிமையாமனதை
  வகைமோசமாய்ப்பகைத்தே
வளர்கின்ற அவிவேக தூதர்கைகொண்டார்கள்
  வாணுளவத்தொழிற்கேதன்
நேசனைத்தனிமதிலு மோசமாங்கோட்டிடையும
  நிலையிலாமகழியரசும்
நின்கிருபையாற்பொடிசெய் துன்னடிமையாகவெனை
  ரட்சிப்பதுனைபாரங்காண்
வீசுபுகழ்செங்கருடன் மீதேறியேழையேன்
  விழிகளித்திட வருகுவாய்
வேதாவையீன்றருட் சீதாபிராமனே
  மெஞ்ஞானஜோதிமயமே. (௬)
அகமொனாதுபுறமொன்று னன்பர்க்குரைக்கவென்
  னலமனங்கூசவில்லை
அற்பரைக்கண்டாலு நேசித்துநிதிவாங்கு
  மாசையளவிடுதற்கில்லை
ஜெகமெனுங்காட்டினிற் கலியெனும்புலியினைச்
  ஜெயிக்கவென்னாற்றிடமில்லை
தீனனாய்த்தேம்பியேயென் னிருவிழியின்மழைமாரி
  சிந்தினேன் சிந்தைநொந்தேன்
சுகமுறவுந்தெந்தநா ளாதிநாள்யானையைச்
  சொல்லாலிரக்கியாண்ட
துரிதமாய்நின்காத் திரியாற்பழியினை
  தொலைத்தன்பர்கூட்டத்தினில்
விசிதமுடனெந்தனை யிரட்சிக்கவேகருடன்
  மீதேறியென்முன்வருவாய்
வேதாவையீன்றருள் சீதாபிராமனே
  மெஞ்ஞானஜோதிமயமே (௭)
சொன்னதெல்லாமுனது செவிகேட்கவில்லையோ
  தூர்த்தனேற்குறுதியிலையோ
தொலையாதகலிபோக்க வருணோக்கமில்லையோ
  தூர்த்தனேற்குறுதியிலையோ
அன்னைமுகநோக்கியோ குழந்தைபாலுணலையோ
  ஆள்வினைநிரைக்கதிலையோ
ஆருக்குமுதவிசெய் தாளவிலையோவடிமை
  யேன்மனமிரும்பாததோ
இன்னமும்பக்குவ மெனக்குவரவில்லையோ

இனியெந்தநாளுள்ளதோ
ஈசனுரைவேணுமோ தாசர்பிணைவேணுமோ
என்னுடல்தளர்ந்துகூனி
யின்னமகாமுன்ன மேகருடன்மீதேறி
விழிகாணவந்தருள்செய்வாய்
வேதாவையீன்றருள் சீதாபிராமனே
மெஞ்ஞானஜோதிமயமே. (அ)

காகமானதுபார்ப்பின் மென்மேதெனக்
காட்சிபெறுசாட்சிபோல
கற்றவர்கணற்றவர்கள் மற்றவர்களுக்கெளிய
கடையினென்கவிசொல்லியும்
தோகையினடனசங் கீதமறுவாசனைச்
சுவைதேறலிவைகள்யாவு
சுகமெனுஞ்சொல்லுலகில் வாழ்வென்பரிலையெலாஞ்
சொந்தமெனமிகநம்பியும்
தாகமாயெனதுநா னென்மகிழ்வின்மூழ்கினேன்
தமியனுக்காவதுண்டோ
சரணகமலங்களிற் பாமாலைசாத்தியென்
சஞ்சலமெலாமொழிந்தேன்
மேகநிகர்வண்ணனே கண்ணனேகருடன்மீ
தேறிவிழிகாணவருவாய்
வேதாவையீன்றருள் சீதாபிராமனே
மெஞ்ஞானஜோதிமயமே. (கூ)

ஆதியந்தமுமிலாச் சங்கரனுநான்முகனு
மகிலம்படித்தழிப்பார்
அனந்தகல்யாணபரி பாவாசுதேவனே
யன்னையோன்மன்னுயிர்க்கு
நீதிநெறிதவ்றாத தாசாதிதாசர்க்கும்
நீயபயமபயமென்ற
நேசர்க்குமுன்னின் றிரட்சிக்கும்ரட்சகனி
னின்னடிமையாகினேனே
சோதியேசோதனைசெய் பாமாலைம்படையுடன்
றுளசிமணிமார்பிளங்க
சுந்தரவிலக்குமி சமேதராய்பூமாரி
துன்றுமிமுழக்கத்துடன்
மேதினியிலென்றனை யிரட்சிக்கவேகருடன்
மீதேறியென்முன்வருவாய்
வேதாவையீன்றருள் சீதாபிராமனே
மெஞ்ஞானஜோதிமயமே. (ய)

மெஞ்ஞானஜோதிமயம்-முற்றிற்று.

ஸ்ரீ

ரகுராமப்படலம்.

உலகமெனுமோர்வனந் தனனிழல்கேணியத
னுள்ளானசிங்கமொன்று
ஓன்றுமதயானையோ ரானைதுரத்தவவ
னோடியத்துறவில்வீழ்ந்து
புலமுள்ள அறுகமேவர் பற்றிகால்தத்திசிரல்
பட்சிபோ லூசலாவாய்
கலமற்றமனிதனைத் தேனியடிக்கவிவ
னவினுற்றேன்றுசிதர
காகசீகத்திலூடு நால்வாயமேற்கொள்ள
நானைகண்டசமுசாரமே
இலவுகாத்திட்டகிளி யாகமன்மறைகள்முறை
யிருமலர்ப்பதமருளுவாய்
என்னுளுமடியார்கள் கண்ணனதேவனே
யென்னையாள்ரகுராமனே (௧)

அரசனருள்பெற்றபோர்க் கல்வியிலையொருவர்பகை
யாவதிலைகுறையொன்றிலை
அதிகாரமேன்மையில் லாததிலைநிதிமலையோ
டியாவருநம்வணக்காதிலை
முரசமுடனவாத்திய முழங்காதகாலமிலை
முறைமையறநெறிதவறிலை
மூர்த்தண்யதிசையெனினு மிதிலக்கினைச்சையிலை
மோட்சத்தில்வாஞ்சியாகி
சுரசகுணபிரசரசு பரசினையளித்தளிசெய்
சலசவேர்சனமாதவா
தனியானதிருநாம மினிதாய்நினைக்கவும்
ஜன்மதீவினைதீர்க்கவும்
இரவுபதிதுதிபரவு பெரியகுலதெய்வம்
ஏழையேற்கருள்செய்தாள்வாய்
என்னுளுமடியார்கள் கண்ணனதேவனே
யென்னையாள்ரகுராமனே. (௨)

விதியினுல்வருவதல்லாது வேறொன்றில்லை
மேன்மையோர்சொல்லிதென்றால்

மேதினியிலுன்றனைப் பூசிப்பதென்யாக
    மோதுங்கள்வாசிப்பதேன்
மதியினால்விதியனை வெல்லலாமென்றுமுன்
    மார்க்கண்டர்சரிதைபோகம்
வாஞ்சித்துமறலியை யடக்கியாவருமகிழ
    வயதுபதினாறுபெற்றார்
துதியினாலும்பதத் தென்மனக்குறையெலாஞ்
    சொல்லிமுறையிட்டுருகினேன்
தொல்லைவினைவந்தெனச் சல்லியஞ்செய்யாமல்
    சுகமுடனிருக்கவருள்வாய்
எதிரிபாவித்தனைக் கைவிடுதனீதமோ
    ஏழையுன்னடிக்கடிமையாம்
என்னாளுமடியார்கள் கண்ணான்தேவனே
    யென்னையாள்ரகுராமனே. (௫)

வெட்டவெளிதன்னிலே கட்டிட்டமேகத்தின்
    மின்னலுண்டானவகைபோல்
மேதினியிலுற்பவத் தேகமதிலுன்னுடைய
    மெய்யருளிருந்தொளிரவே
நிட்டைவெளியாகியே யறிவைத்துணைக்கொண்டு
    நெற்றிமத்திப்பார்வையால்
நீயென்றுநானென்று நடுவின்மத்திசமென்று
    நினைவகனையூடறுத்து
திட்டமுளவுந்தனிரு திருவடிக்கடிமையாய்த்
    தெரிசித்தழுத்திபெறவே
தீயிலிடுமெழுகுபோ லனுதினமுமாடியே
    தேடிமனமவாடிநொந்தேன்
இட்டகுலதெய்வமே பையராவிற்றுயி
    லிறங்காவிரங்கவேணும்
என்னாளுமடியார்கள் கண்ணானதேவனே
    யென்னையாள்ரகுராமனே. (௬)

கோனினைக்கிற்றிரண் மேருமேருவுங்
    குணமிலாத்திரணமாகும்
குருநினைக்கிற்கல்வி ஞானமாமோனமாங்
    கோதிலாமோட்சமாகும்
வானினைத்துலகில் மும்மாரிபொழியுமழை
    மாறின்வண்மாரிதனழையும்
வையம்பகைக்கினு முய்யும்வகைதேறில்லை
    வாணியருளிற்கல்வியாம்

நீங்கினைக்கிற்கொடிய கர்மவினைநிற்குமோ
நின்னருளின்னமின்ன
நோவிலையோவசட னிசயிலாப்பாவியேன்
நின்னடிமறைந்துண்டோ
ஏனெனைக்காமவிம் மாய்கைக்குண்மூழ்த்தினை
யென்றென்னைமீட்டாளுவாய்
என்னாளுமடியார்கள் கண்ணானதேவனே
யெனையாள்ரகுராமனே. (ரு)

அரசனும்மோரறிவி னாண்மனக்கள்ளனை
யன்பெனும்மணிக்கயிறுகொண்
டசையாதிருக்கியுன் னடியவர்க்கடிமையா
யாக்குவோமெனனடவிசூழ்
பரிகள்ளபாட்டையில் வரும்போதுபாழான
பசியாம்பெருங்காற்றினால்
பதறிபெரிமூன்றிடச் சைதன்யவாடாவப்
படுமெனக்கள்ளனோட
புரியதாமனமெனும் பாசம்பொடிப்பொடிப்
போயகாலென்றுகூட்டும்
பொருளில்லையருளில்லை வெண்ணெய்படிமூன்றுழி
போனகதைபோலாகினேன்
இரவுபகனின்னாம சீவனஞ்செய்யாம
லென்றைக்குன்னாளாவனோ
என்னாளுமடியார்கள் கண்ணானதேவனே
யென்னையாள்ரகுராமனே. (சு)

செப்பமுளமானிடர்க் கொருவயத்திற்
செய்யாதுநித்திரையிற்போஞ்
செய்குழவிபாலரிற் பத்துவயதேகிடும்
ஸ்ரீயாசையொருபத்துமாம்
முப்பதாமாண்டினமேன் மூன்றாசையற்றரிய
முத்திக்குகந்தபொருளை
முறைமையுடனாடுவது முதன்மையென்றௌவைதரு
மொழியின்படிக்கிசைந்தே
தப்பிதமிலாமலுன் றாமரைச்சரணினை
தனித்தகமிருத்திவாழ்த்தி
சாஷ்டாங்கஅஷ்டாங்க மாகப்பணிந்தெனது
சஞ்சலமெலாமுரைத்தேன்
இப்பிறவிதீர்த்திட ரினிப்பிறவிவாராம
லென்னையாட்கொண்டருளுவாய்

என்னாளு மடியார்கள் கண்ணான தேவனே
யெனையாள் ரகுராமனே. (எ)

உதையாதிகாலத்திலொருகடிகையுன்னடிமை
யுன்னாமமுறையாமலே
ஓயாதசாண்குழிக்கிரைதேடியோடியே
யுயிருடன் செத்தபிணமாய்
வதையாதிமுதலானகொடுமைக்குடன்பட்டு
வஞ்சமனநெஞ்சனாகி
மட்டிக்குலாமர்பாற்சென்றுசமயம்பார்த்து
வள்ளனீயொன்றுவாழ்த்தி
புதையலீந்தவரெனப்பூரித்தவர் தரும்
பொருளையிருக்கைக்கொண்டேந்தி
புத்ரதாராதியருடன் மகிழ்விலாழமிப்
புன்மையனுகாதவண்ணம்
இதயமலர்தன்னிலேயிருபுகாமபுயமலரை
யென்றுயான் கண்டுய்வனோ
என்னாளுமடியார்கள் கண்ணானதேவனே
யென்னையாள் ரகுராமனே. (அ)

அம்புவியில்யாவரும் கண்காணநின்னடிமை
யாக்கியெனை யாள்வதென்றோ
ஆசாபைசாசத்தைத் துரத்தியுன்னருளாலே
வமுதங்கொடுப்ப தென்றோ
கும்பலாய்வருகின்ற வினையுனதுமகிமையாற்
குறைந்தழித் தொழிவதென்றோ
குணமிலாவைம்புலக் கயவருன் கருணையாற்
குலநாசமாவதென்றோ
சம்பமாமம்புயச் சரணமலரான்பினற்
றரிசிக்குநாள்களென்றோ
சாகாச்சம்சாரவ மாழில்தென்றோதாசர்
தப்பொடுபுறப்பதென்றோ
இன்பரிற்றுன்புவின் பங்களில்லாதநீ
யேழையைமதிப்பதென்றோ
என்னாளுமடியார்கள் கண்ணானதேவனே
யெனையாள் ரகுராமனே. (கூ)

கள்ளுண்டதள்ளுண்ட பேயர்போல்மதமேறு
காரானைபோல்பித்தர்போல்
காடென்றுநாடென்று மேடென்றுதெரியாமல்
காசினியெலாமலைந்து
முள்ளுண்டகள்ளமன மூடன்கணில்லாத
மூர்க்கவஞ்சகனுமெனை

மோகவாரிதியின்மூழ் காமனின்மயலான
 மூத்திவழிகூட்டிநாடி
தெள்ளுதமிழ்வாணர்சிவ னடியாரின்தாசர்பேற்
 சிறுவனுக்கருளளித்தாய்
தேவாதிதேவனே திவ்யகுணமணாளனே
 திகழ்ஞானவாசுதேவனே
எள்ளுநகுளெண்ணைபோ லெங்குமாயாவுமா
 யிருவினைதொலைக்குமரசே
என்னாளுமடியார்கள் கண்ணானதேவனே
 யெனையாள்ரகுராமனே. (௧௦)

ரகுராமப்பத்து முற்றிற்று.

கோவிந்தப்பதிகப்பத்து.

நாகமேற்பள்ளியா யோகநித்திரைகொள்ளும்
 ராகவமுகுந்தனுமன்
நாராயணாவென்று பாராயணஞ்செய்து
 நாளுந்துதிபறக்க
தேகக்கீற்றுமிழி சிந்தைகயோபலவிதஞ்
 செய்கையோவெகுவினோசம்
செப்பும்வசனங்கோடி தப்பிதமிதற்கென்ன
 செய்தேனினி யானைநேர்வேன்
பாகனையமொழிமாதர் மோகவலையிற்சிக்கி
 பஞ்சென்னநெஞ்சுழன்று
பாழானநாமத்துள் வீழாமலெந்தனைப்
 பக்ஷம்வைத்தாளுதற்கு
வாகைமேற்கொண்டபுய செங்கருடன்மீதேறி
 வல்வினையகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
 மாதவாகோவிந்தனே. (௧)

கருவாய்கருப்பையிற் கண்டுண்டுதசமதிக்
 காசினியிலேபிறந்துக்
கருணையுடனுனதுதிரு வடிவமலர்ப்பணியாத
 காமினுனுடல்கூசவும்
உருவாயெனைத்தந்த வன்னைதந்தையருற்ற
 வுறவினம்வெறுத்தேசமும்

உலகவாழ்விற்பழகு பலமனிதர்பேசவும்
  உருகவளோடிவிரவும
அறிவானவறிவினர் போலமதிமோசமா
  யாற்றிற்கரைத்தபுளியாய்
அவத்திலவாளுன்கொடுத தலையுமடிமைக்குணது
  அடிமலரடிததாளவே
மருவிசுமலைபுய செங்கருடன்மீதேறி
  வல்வினையகற்றவருவாய்
மாயாவதரனே சீதாபிராமனே
  மாதவாகோவிந்தனே. (௨)

பொல்லாதவேளையோ சொல்லாதகாலமோ
  பூர்வமயான் செய்தவினையோ
பூதம்பதத்தில்வளர் மாமாயையாசையாற்
  பொய்யானவாழ்வைநம்பி
உல்லாசமாகவே உண்பதுமுடுப்பதுவு
  மோயாமலிரவுபகலும்
உறங்குவதல்லாலுனது திருநாமமந்திரத்தை
  யுன்னுதல்லாமறந்து
எல்லாமறிந்தவர்கள் போலும்வாயாற்பிதரி
  யிதொருவரிலையென்றே
இருமாந்துதிரிகின்ற வேழையேயென்னைநீ
  இப்போதரட்சிக்கவே
வல்லாண்மையானபுய செங்கருடன்மீதேறி
  வல்வினையகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
  மாதவாகோவிந்தனே. (௩)

போகபாக்கியமாக யில்லறமிருந்துனை
  பூசைபுரிவோரனந்தம்
புலனடக்கியே மலையேறிமாதவம்
  புரியுமுரிவோரனந்தம்
சேகரமதாகவே நல்லடியராய்வந்துன்
  சேவைசெய்வோரனந்தம்
திக்குவேறிலையென் றக்கரையுனன்றும
  தீர்க்கங்கள்வோரனந்தம்
யோகமுடன் அஷ்டாட் சரத்தையுளம்வைத்துன்னு
  மோனமுனிவோரனந்தம்
முத்திக்குயாவரும்பணிவர்யான்முழுமூடன்
  மூண்டக்ச்சரணருளவே

வாகுபெருசெங்கருடன் மீதேறிநாயினேன்
வல்வினையகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
மாதவாகோவிந்தனே. (௪)

உந்தனுக்கொருகாசு கற்பூரமலர்மாலை
யொளிதீபமிடுதுசெய்தால்
ஓலமிட்டலறுவேனே தர்மபரிபாலனை
மூகந்துசெய் வோரைமதியேன்
நித்தனைப்பேச்சலா லுந்தனற்றிருநாமம்
நினைவிலும்பேசியறியேன்
நேமமல்லாமல்நீதி யாசைகொண்டேனல்லால்
நின்மதம்பூசைகுறியேன்
இந்தவிதமெனதுசெய நந்தநந்தாவேழை
யீடேறவென்னவிதமோ
நாரணநேமனே சேஷகிரிவாசனே
இப்போதுதயக்கார்க்கவே
மந்தரகிரிக்குநிகர் செங்கருடன்மீதேறி
வல்வினையகற்றவருவாய்
மாயாவதாரனே சீகாபிராமனே
மாதவாகோவிந்தனே. (௫)

காட்சியாய்நின்னுபய கமலப்பதந்தனைக்
காணும்வகை தேடுவழியுங்
காணுமனக்குறைநி னற்கவலைகொண்டயர்வு
கண்டுநின்றேமையுடனே
வீக்ஷணகடாக்ஷமுட மெய்யன்பருக்கடிமை
வேலைசெய்வேசாரியும்
வீணனமாயமோ கத்தினல்வாணன்
விடுப்பதோமெய்க்காட்சியோ
தாட்சியாய்க்கோடிபிழை செய்தாலுமென்னளவு
தாக்ஷணியமென்பதிலையோ
சர்வகணரக்ஷக தயாளுநீயல்லவோ
தற்காக்கநல்லசமயம்
மாக்ஷிபெறவாச்சுதென் றேகருடன்மீதேறி
வல்வினையகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
மாதவாகோவிந்தனே. (௬)

ஆறுதலுமென்கொடுமை யநியாயமநியாய
மகிதலத்திலென்போலிலை

அநேகமாய்மதனுக்கு நமனுக்கும்வாளு
  ளவத்திலொப்பித்ததல்லால
ஊனுருமுடலைவிட் டுயிர்போகுமுன்னமுன்
  னுலவாப்பெரும்பதத்தை
யுறுமாறினானருளினாற் கண்டுண்மைநாடா
  துலைத்தபெருமாய்கையதனால்
நானானென்றதோ ராணவப்பேய்கொண்டு
  நன்மார்க்கவழிவிட்டுபின்
நாயிலுங்கடையான நாயினேனுன் கருணை
  நாடினேனாட்செல்லுமுன்
வானாடர்மண்ணாடர் பணியவெங்கருடன்மிசை
  வல்வினையகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
  மாதவாகோவிந்தனே. (௭)

சீலமுளசேஷசயனாதிருப்பாற்கடற்
  செல்வனே தசரதற்குச்
செல்வமகவாய்வந் துதித்தஸ்ரீராமனே
  சீதாமனோகரத்தால்
கோலமுளகல்யாண ராமாநெடுந்தனுக்
  கொண்டகோதண்டராமா
குணமாதுவாக்யபரிபாலராமர்தனைக்
  கோடியணைசெய்தராமா
ஆலகாலத்தைநிக ராவணாதியர்தமை
  யழித்தசெயராமசோமா
அரிபிரியைசானகி கனிட்டனுடனமுதன்
  டயோத்திபட்டாபிராமா
மாலையணிமார்பனே யென்னையாள்கருடன்மிசை
  வல்வினையகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
  மாதவாகோவிந்தனே. (அ)

உலகரட்சகனுநீ யுயிர்கள்ரட்சகனுநீ
  யுன்செயலலாதொன்றில்லை
உந்தனற்கிருபைதா னெந்தனுக்கில்லையோ
  வுயிர்த்தொகையில் நானில்லையோ
மலையமலைபோனெடும் வல்வினைவளைந்தென்னை
  வாட்டுதேபேயாட்டுதே
மாருதவுருமைதீ மூட்டுதேபிறவிநோய்
  வருமென்றபயமாட்டுதே
கலவரமதானமன மொருநிலையினிற்கவலை
  காமிக்கோர்திக்குமில்லை

கைவிடுவோமின்னம்ப ருன்னைநம்பாரிவரிக்
    சனகாம்பராமணிதரா
வலிமைபெறுசெங்கருடன் மீதேறிக்கண்காண
    வல்வினையகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
    மாதவாகோவிந்தனே (௯)

துக்கசுகபோகமாய் வளர்கின்றயிருவினைத்
    தொடரினுடலுருவமாய்
தோகையர்கண்மோகவலை யாழுலைமேலாசையும்
    சொர்ணமலைமேற்பாசமும்
அக்கிரக்கொடியர்பா லேசவிசுவாசமும்
    அறிவையறியார்நேசமும்
ஆனங்கமெனவுபா னகயகிழுபாசமும்
    அரிச்சந்தமனைவாசமும்
தக்கயிகபோகமென் றக்கினிமனத்தையான்
    தாதுதிருவடியினீழல்
வாழ்ந்திவாழ்த்தாம லிருளானமாய்கையிற்
    றமியேனுலைந்தழிந்தேன்
மகள்கொழுவாழ்கின்ற கருடன்மீதேறியென்
    வல்வினையகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
    மாதவாகோவிந்தனே. (௰)

கோவிந்தப்பதிகப்பத்து முற்றிற்று.

சிந்தைகுடிகொண்ட பதிகம்.

ஆசிரியவிருத்தம்.

சந்தையறிவேதாந்த சித்தாந்தநீதிநெறி
    சாத்திரமெலாமுணர்ந்து
சாதுசங்கச்சனி தானத்தடைந்துயானு
    ருய்ந்தடியிணைமுடிசூடியே
பங்கசவிலோசன பரந்தாமகீர்த்தனம்
    பாடாமலிருமந்திரம்
பண்ணுமலுன்னபய பதமலர்க்கூழியம்
    பண்ணுமல்விண்ணுணமாய்

சங்கனரியுமாதர்தோள் சார்ந்திணைச்சேர்ந்து
    சஞ்சலக்குழியிலாழ்ந்து
தலையெடுக்காமலேனுய் வறுமையாய்ச்சிறுமையாய்த்
    தமியேனுனைத்துதித்தேன்
இங்கனணிபணிவதன சங்குசக்ராதரா
    தீவினையகற்றியாள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
    சிந்தைகுடிகொண்டகுருவே. (௧)

சுயமானசாயுச்சிய பதவியானடையவே
    தொல்லுலகிலுன்னிரிதமும்
துதிசெய்துமதியினுக் குறுதிமொழியிவ்வேலை
    சொல்லுமென றுனைநம்பினல்
அபனுரமைத்தபடி மயனுகைவதுபோக
    மாமென்று மவ்வவர்வினை
அனுபவித்திடவேண்டு மென்றுநெறிசொலுமறைக
    ளலறிமுறை யிடுதலாலே
பயமானபாவியேன் பயனென்றுருமையாற்
    பணிந்தாதி மூலமென்றே
பாடினேனாடினேன செய்வதென்றோர்
    பதிதனைக் கைவிடாதே
ஜெபகருடகேதனச் சங்குசக்ராதரா
    தீவினையகற்றியருள்வாய
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
    சிந்தைகுடிகொண்டகுருவே. (௨)

னந்தனுக்குப்பாக்கிய மீவதற்குன்னரு
    ளிருக்குமே னின்மனைவியால்
என்னையாள் தருணமேயோ வென்கணவனுன்மைந்தனு
    லென்பிறவிநீக்கலரிதோ
சொந்தமுனதாசரென்டு பந்தப்படுத்தினின்
    றெண்டனென் றுள்வதரிதோ
தொகைப்புறட்டேசவுன லாகாதகர்ரியந்
    தொல்லுலகில் சொல்வதுளதோ
கந்தமாதனமுனிவ ரிபிரமாயாவரும்
    கைகூவித்திடுதெய்வமே
காசினியிளலவற்ற தொல்லையிற்சேர்த்தெனை
    கண்கலங்கச்செய்தனை
சிந்தைவேகத்தின்முன வருகருடனேறியென்
    தீவினையகற்றவருவாய்

சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடிகொண்டகுருவே. (௩)

சங்கஞ்சந்த்ரனைக் கண்டவிருள்போலவும்
அழல்கண்ட சருகுபோலும்
தபனனைக்கண்டபனி போலவுஞ்சிங்கத்தை
தந்திகண்டிடுதல்போலும்
வந்தனைசெய்யுந்தாச னைக்கண்டுவாழ்த்தவகை
வாழாதமூடர்போலும்
வாடினேன்மாபாவி தேடுருவண்ணனீ
மனதுவைத்தாளவேணும்
சொந்தமுளநின்னடிமை யிந்தவினையூடுபோய்
சோராமலாளாவிடிற்
றொலையாதநிந்தனை யுனக்குவரும்நான்சொன்னேன்
துரோபதைதனக்கருள்செயுஞ்
செங்கிகிரியுஞ்சங்கு தங்குபுயகாருண்ய
தீவினையகற்றியருள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடிகொண்டகுருவே. (௪)

புக்காதகருவில்லை புசியாதநீரில்லை
பராளாததொழிலுமில்லை
புண்ணியஞ்செய்வதில்லை பிழைமோசம்விடுவதில்லை
புலையனென்காரியமில்லை
மிக்கானவேழுதல் வேதனுங்காணாத
விஞ்ஞானஜோதிமயமே
மெய்யாகுநின்னுபய செய்யாதனைப்பைய
வித்தைமனவீட்டிருத்தி
அஞ்ஞானமாமடவி யைச்சுட்டெரித்ததி
லகங்காரமிருகமோடி
ஆசைவலையைக்கொய்து தாசானுதாசனு
னாகும்படிக்கருள்செய்வாய்
திக்காருமிலலைநீ கதியென்றுநம்பினேன்
தீவினையகற்றியருள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடிகொண்டகுருவே. (௫)

மூவாசையுங்கொண்ட வெங்கொடுமைபோலிந்த
மூவுலகிலொருவருண்டோ
மூதறிவிலாமலே பாதகததொழில்செயு
மூர்க்கனெனையன்றியுண்டோ

பாவாசுபாடாற் பாவோடுவோர்கள்போற்
பகர்பேதையன் றியுண்டோ
பணங்காசுதுணிமணிகளென் றுபகலிரவும்
பறப்பவர்களென் னிலுண்டோ
நாவாசையாலுனது திருமந்திரத்தையென்
னாவினிலுரைத்ததுண்டோ
நால்வர்சபைகூடியே நின்புகழ்ப்பசனைசொல்
நான்செவிகொடுத்ததுண்டோ
தேவாதிதேவனீ யறியாததொன் றில்லை
தீவினையகற்றியாள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடிகொண்டகுருவே. (௬)

உடலைவிட்டுயிர்பிரிந் தின்றைக்குநாளைக்கு
வொருகணத்தென்பதில்லை
உலைவாயின்மெழுகென்ன உருகிகண்ணீர்பெருகி
யோடுயிளைத்தேடியோடி
மடைவாரிதிரீரென்ன வாய்வரண்டனுதினம்
வாடிமனைவாழ்க்கைதேடி
வந்தபின்கொஞ்சபோ கத்தில்விளையாடிநன்
மனைமக்களைக்கூடியே
இடைமீதிருந்தபட் டாடையையிழுந்தமதி
யினர்போற்காலமெல்லாம்
இப்படிகழித்தனன் னீகிடைத்துங்கனம்
மென்னவுன்னின்பெரியசோ
திடமுடனே தடதடென கருடன்மிசையோடியென்
தீவினையகற்றியாள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடிகொண்டகுருவே. (௭)

மன்னவாகேசவா நாராயணாகௌரீ
வனமாலிவாசுதேவா
மாநிலமளந்தவா மனகூர்மநரசிங்க
மாதவா மணிமாலையா
என்னும்நின்னாமமே பண்ணினானன்றிது
வெள்ளளவிரக்கமில்லையே
என்னிடவதிஷ்டமுனை யோகொடியபாவியா
னென்னமுந்நாட்செய்வினையோ
அன்னைதந்தையர்கள்போ லாதரிப்பவர்களுனை
யல்லாமல்வேறுகொள்ளோ

அபிஷேகமுடிகொண்டு வனுமச்சமேதரா
யாசுபுரிவிரசையரசே
இணையில்லாதவட் டரக்காத்தெய்வமே
தீவினையகற்றியாள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடிகொண்டகுருவே. (அ)

நெஞ்சைப்பிளந்திரணி யகன்றனைக்கொன்றதும்
நெறியுள்ளதசரதற்கு
நீண்டசேடன்சங்கு திகிரியபிரியா
நீமகனெனப்போந்ததும்
வஞ்சகத்தாடகைச் சுவாகுவைமுடித்துவரு
வழியினிற்பெண்ணானதும்
மங்களம்சாகவே திங்கள்குலசானகியை
மாலையிட்டேர்புக்கவும்
அஞ்சியேசிற்றன்னை யாற்காடடைந்துமறை
யந்தணர்க்கருள்தந்ததும்
அழகானதஞ்சவடி யுற்றுசவுரிக்கரு
ளளித்ததுஞ்சயமுற்றதும்
செஞ்சிலைக்கோதண்ட ராமனேமெய்யெனிற்
றீவினையகற்றியாள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடிகொண்டகுருவே. (௯)

அனில்மேல்வருங்கொம்பி தன்னிற்கதிக்கதீ
ராசினையாகவில்லையோ
அங்காத்தனின்மேக மூத்தற்கலாபங்க
ளாடிமகிழ்கூடவில்லையோ
துணிவாகுமாமீன் சிந்தைகண்பார்வையாற்
றோன்றியகருக்களிலையோ
துணையாகயுன்றனுக் கடிமைதானுனைபின்
றொல்வினைதடைப்பதரிதோ
பணிமசுகாதகற் பாறையோபசைவற்றி
பச்சைநிறமற்றமரமோ
ப்ரமசிவனணிகின்ற பாம்புருவாய்புற்றேருவிப்
பாவியேன்சென்னியிரண்டும்
திணிகொணின்னிருசெவிக் கென்சொல்வரவில்லையோ
தீவினையகற்றியாள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடிகொண்டகுருவே. (௧௦)

சிந்தைகுடிகொண்டபதிகம் முற்றிற்று.

ஸ்ரீ

ஆதிஸ்ரீரங்காபதிகம்.

கஞ்சாவுமபினியுஞ் சாருபவகைகளும்
    கள்ளுமாமிசமும்வைத்து
கண்மூடிபெண்ணாசை யைக்கருதிநிட்டையிற்
    காத்திருப்பார்களந்த
நஞ்ஞானபிறர்வஞ்ச மாயத்தைநிசமென்று
    நல்லறிவழிந்துநிதமும்
நன்மார்க்கவழியெலாந் துன்மார்க்கவழியென்று
    நம்பிருப்பிக்கலைந்து
நெஞ்சாரவளவற்ற களவுகொலைகாமங்கள்
    நீங்காதகோபலோப
நிர்மூடனானுன்ப ருடமருவலரிதென்று
    நெட்டுயிரம்பித்தகாலம்
அஞ்சாதேயென்றனக் காதாவுசொல்லவோ
    யந்தரத்தானமாக
அன்பாகமுன்புவந் துபதேசமருள்செய்து
    வாதியேஸ்ரீரங்கனே. (௧)

பேசாதமௌனியுட் புறம்பொன்றதாம்பெரியர்
    பேசுமனைமக்களாசைப்
பேய்கொண்டுபசுவினிற் றேய்போர்த்தழுலைபோற்
    பொய்யைமெய்வேடமாக்கி
தேசாதிதேசமுந் தீர்த்தங்களாடினம்
    திருவடிகளைப்பணிந்தால்
தீவினைகள்தீருமென் றுசீர்வதித்துத்
    திருத்துளவநீருமீந்து
வாசாகயிங்கிரிய வார்த்தைசொல்வாரந்த
    வஞ்சகாதமைப்போலியான
மனதென்றுநினைவொன்று காசாசைமேற்கொண்டு
    வாடியழுமெனையஞ்சலென்
றுசாபசாசைக் தாத்திநாயடியனேற்
    கந்தரத்தானமாக
அன்பாகமுன்புவந் துபதேசமருள்செய்த
    வாதியேஸ்ரீரங்கனே. (௨)

பாவியேன்பொல்லாத கோவியான்பஞ்சமா
    பாவியான்பெரியோர்களைப்
பணியாதபாவியா னெனப்பிறந்தேனையோ
    பார்க்கவேசுவரிசெழுத்தும

ஓவியம்போலவே யுருவெடுத்தேனலால்
    ஒருவர்க்குடென்னையிட்டு
ஒத்தாசையுதவினா னிது புவியிலுண்டோ
    உலகளந்தவனேயுனைக்
கூவியேதமிழினாற் றோத்திரஞ்செய்தனன்
    கோதண்டராமராமா
கோபாலகிருஷ்ணனே பாற்கடலிலேபள்ளி
    கொண்டநரசிம்பரூபா
ஆவிதானுடலைவிட் டகலுமுன்பாகநீ
    யந்தரத்தானமாக
அன்பாகிவந்தெனக் குபதேசமதுசெய்த
    வாழியேஸ்ரீரங்கனே. (௫)

தென்புடனேயாவருந் திருமால்தனக்கடிமை
    செய்வோர்கள் தங்களுக்கு
தீவினையகன்றுபோ மென்றதாலுன் றனைத்
    தியானமேசெய்யவுறுதி
நம்புதலையெந்தனுக் கொருநாளுமில்லையே
    நானிதற்கென்னசெய்வேன
நாராயணாவேத பாராயணாவென்று
    நம்புமடியார்களுக்கு
சம்பிரமதாய்வந்து முன்னின் றன்னருளளித்து
    சகலவரமுங்கொடுக்கும
தாமோதராவுனது மகிமையைத்தமிழினாற்
    சாற்றுதற்கெளிதாகுமோ
அம்புவியில்யாவருங் காணவேயெந்தனுக்
    கங்கரத்தானமாக
அன்பாகிவந்தெனக் குபதேசமதுசெய்த
    வாழியேஸ்ரீரங்கனே. (௬)

ஆற்றிலேவருகின்ற வெள்ளமதுபோலவென்
    னறிவுதனிலுந்தனற்றாள்
ஆனந்தமாகவே பொங்கிவருவெள்ளமதை
    யான்கண்டுமகிழாமலே
சோற்றுடலையழியாப் பொருளென்றெண்ணியென்
    தோகையர்கள்மாய்கையதனால்
சுழல்வண்டுபோலவே யலைகிற றமனமுள்ள
    துர்டர்களினங்களுற்றேன்
கூற்றுவன்போலெனைக் காமவினைபோராடிக்
    கொல்லுதென்செய்வேனையோ
கொண்டல்நிகர்வண்ணனே கேள்விமுறையில்லையோ
    குவலயந்தன்னிலுந்த

ஆத்மகுருவாகியே தேவரீரெந்தனுக்
கந்தரத்தானமாக
அன்பாகிவந்தெனக் குபதேசமதுசெய்த
வாதியேஸ்ரீரங்கனே. (௫)

கட்செவியணைமீதிலே பள்ளிகொண்டவனுநீ
கஞ்சனைவதைத்தவனுநீ
கபடநாடகனுநீ யாதிநாள்யானையைக்
காத்தருள்புரிந்தவனுநீ
பச்சைநிறமாகவே வளர்கின்றமாலுநீ
பாருலகளந்தவனுநீ
பதியுநீகதியுநீ யடியார்களுள்ளமதில்
பண்பாயிருப்பவனுநீ
இச்சையாயுந்தனற் பாதமேகதியென்று
யெண்ணுமவர்தங்களுக்கு
யிகபரமிரண்டினும் மேலானவாழ்க்கையுட
னின்பங்கொடுப்பவனுநீ
அச்சுதானந்தனே தேவரீரெந்தனுக்
கந்தரத்தானமாக
அன்பாகிவந்தெனக் குபதேசமதுசெய்த
வாதியேஸ்ரீரங்கனே. (௬)

ஒருவேளைபோசனஞ் செய்துனைவணங்கியே
னுடலொத்துவருவதில்லை
உள்ளமதிலளவற்ற கள்ளமதிருப்பதால்
உறுதியோநிற்கவில்லை
திருவிறையுமார்பனே யுந்தனைக்கண்டுயான்
தெரிசனஞ்செய்வதற்கு
திஷ்டியோதிறமில்லை நீயுமஸ்தலமதில்
சிலநாளிருக்கவென்றால்
நிருவாகமெந்தனுக் கில்லாதிருப்பதுன்
நெஞ்சென்னவறியாததோ
நீதியாயெந்தன்வரலாறுகேளிவ்வாறு
கெட்டுயிர்ப்புற்றலைந்தேன்
அரிவையர்கள்மோகவலை தன்னிலேவீழாம
லந்தரத்தானமாக
அன்பாகிவந்தெனக் குபதேசமதுசெய்த
வாதியேஸ்ரீரங்கனே. (௭)

கருமவினையாலே வருகின்றபிணிகளைக்
கண்டுநானசொல்வதென்ன
காகுத்தனேயுனது வுள்ளமறியாததோ
கருணைகடாக்ஷகுருவே

மருமவலிமோகமும் நீரிழிவகுட்டமும்
மாருதவயிறுவலியும்
மாலையொடுசூலையும் பித்தமொடுவாதமும்
மண்டையிடிகாச்சலுடனே
இருமலுடன்வாழ்கின்ற மந்தாரகாசமும்
இன்னமுமநேகவிதமாம்
எளியேனையிதுவெலா நாடாமலுந்தனல்
லிணையடிகளைப்பணிந்தேன்
அருமறைகள்தேடியுங் காணாதவஸ்துவே
யந்தரத்தானமாக
அன்பாகிவந்தெனக் குபதேசமதுசெய்த
வாதியேஸ்ரீரங்கனே. (அ)

தூண்டணிலுதித்திரணி யன்மூனுவிரணியன்
றுஞ்சவெழின்மார்புகின்ற
துஷ்டநிக்கிரகசிங்க சிஷ்டைபரிபாலனே
தொல்லுலகிலுந்தனடிமை
சாண்வயிர்வளத்திடுந் தாபத்திரியங்களாற்
றமிட்கவிதைபாடியாடி
சண்டாளர்தங்களைக் கொண்டாடிநித்தமுஞ்
சங்கடப்பட்டுழன்று
வீண்பொழுதுபோக்குவ தெலாமுனதுசமுகமதில்
மெய்யாகவேயுரைத்தேன்
வேதவேதாந்தனே சீதாமுகுந்தனே
விண்ணவர்க்கணிகையபரமே
ஆண்மைதலையாயெனக் காதரவுசெய்யநீ
யந்தரத்தானமாக
அன்பாகிவந்தெனக் குபதேசமதுசெய்த
வாதியேஸ்ரீரங்கனே. (கூ)

ஊர்பேரிருந்தென்ன வொத்தாசையாயெனக்
குற்றாரிருந்துமென்ன
உறவாயிருந்தென்ன பகையாயிருந்தென்ன
வுறுதியாயென்னையீன்ற
பேர்தானிருந்தென்ன பெண்டீரிருந்தென்ன
பிள்ளைகளிருந்துமென்ன
பெருமையாயுலகமதை யாள்கின்றவரசநற்
சிரியமுமிருந்துமென்ன
சீர்தானிருந்தென்ன யானையொடு குதிரையுஞ்
சீமைகளிருந்துமென்ன
தெய்வபூசைகள்செய்கின்ற சண்டனிடபாசமது
சேர்ந்தெனைக்கட்டும்வேளை

ஆர்தானிருந்தென்ன வென்னுயிர்க்காதார
மாமோகமேஜந்திரவரதா
அன்பாகிமுன்புவந் துபதேசமதுசெய்த
வாதிமேயஸ்ரீரங்கனே. (௧0)

ஆதிஸ்ரீரங்கபதிகம் முற்றிற்று.

இராமப்பத்து.

கடலிலலைவதுபோ னிதமுமெந்தன்
கவலையினாலறிவழிந்து கவியால்வாடி
உடல்மெலிந்துய னிருந்தால் பாவிமாயம்
ஒழிந்திடுவதெவ்விதமோ வுலகமீதில்
விடமெனவேயெனைத்தொடரும் துன்பநீக்கி
வெயிலொளிபோலுன்பாதம் விளங்கச்செய்வாய்
நடனமிடுபரிநகுல சகாயனென
ராமாவென்றுந்தனைநா னம்பினேனே. (௧)

கற்பதருவாமுனது செய்கையென்றுங்
கயிலாசநாதரென்று கவிகள்பாடி
அற்பரிடஞ்சென்றெனது தலர்ச்சியெல்லாம்
அறிவழித்துயானேதினித மலைந்திடாமல்
விற்பனஞ்சேருன்கிருபை யெனக்குநல்கி
வெயிலொளிபோலுன்பாதம் விளங்கச்செய்வாய்
நற்புலவராமர்தொழும் ஞானஜோதி
ராமாவென்றுந்தனைநா னம்பினேனே. (௨)

எந்தனிடயோசனையுந் துன்பவாழ்வும்
இரவுபகலென்னுளத்தி லிடைவிடாமல்
சிந்தனையேசெய்திருந்தா லெந்தநாளுன்
திருவடிக்குநானடிமைசெய்வதையா
விந்தைபெறவேயெனவே கவலைநீக்கி
வெயிலொளிபோலுன்பாதம் விளங்கச்செய்வாய்
நந்தகோபாலனென வந்தஜோதி
ராமாவென்றுந்தனைநா னம்பினேனே. (௩)

மாடுநிதிபெண்டுபிள்ளை யுலகமியாவு
மற்றுந்தன்மலரடியை வணங்குதற்கு
மூடமெனுமிருள்விலக ஞானதீப
முகுந்தனேயெனக்களித்து முத்தியான
வீடுதனிலென்னாளு மருவிவாழ்ந்து
வெயிலொளிபோலுன்பாதம் விளங்கச்செய்வாய்

நாடுமயோத்தியி னரசனென்றவீர
　ராமாவென்றுந்தனைநா னம்பினேனே. (௪)

பாதியுள்ளயகவீழ்ந்தா லுலகிலுள்ளோர்
　பாதகவித்துமனமிரங்கி யெடுப்பார்துஷ்ட
புத்தியில்லாப்புலிதனக்கு யாருதவிசெய்தார்
　பிறவியெனும்பெருமடுவிற் பொய்யன்வீழ்ந்தேன்
வித்தகனேயெனக்கிகவோர் நின்னையன்றி
　வெயிலொளிபோலுன்பாதம் விளங்கச்செய்வாய்
நத்தம்வளர்கோசலைநா டாளவந்த
　ராமாவென்றுந்தனைநா னம்பினனே. (௫)

அகலியென்னபோர்தாமோ பிரகலாதன்
　அண்ணன்மகனோவனுமா னம்மான்றானோ
ஜெகமதனிற்பாண்டவர்கள் தாதைதானோ
　சிறிபதங்கைவீடணனோ நாளெவ்வானோ
விகிதமூடனெந்தனைநீ யாள்வதற்கு
　வெயிலொளிபோலுன்பாதம் விளங்கச்செய்வாய்
நகமதினாலிரணியனை வென்றசிம்ம
　ராமாவென்றுந்தனைநா னம்பினேனே. (௬)

எண்ணெயளமட்டுமல்லால் விளக்கின்ஜோதி
　யிருண்டிடிலோதம்மாம்மவ் வியற்கைபோலே
மண்ணுலகிலென்னுடலு முயிரும்வேறாய்
　மாறுமிடத்தருபிணமா மலர்க்கையாலே
வெண்ணெயள்ளியுண்டவனே யெனக்கிப்போது
　வெயிலொளிபோலுண்பாதம் விளங்கச்செய்வாய்
நண்ணைதிருமந்திரஞ்சேர் நற்சீதாபி
　ராமாவென்றுந்தனைநா னம்பினேனே. (௭)

தஞ்சமென்றவடியேனைக் காத்திடாமல்
　சம்சாரசாகரத்திற் றளர்ச்சிகூற
வஞ்சகமாய்த்தள்ளிவிட்டா லெந்தநாளும்
　மலரடிக்கீழடிமைசெய்ய வருவனையா
விஞ்சையர்கள்மகிழ்ந்திடவே யிந்தவேளை
　வெயிலொளிபோலுன்பாதம் விளங்கச்செய்வாய்
நஞ்சமுண்டபரமசிவன் மகிழ்பட்டாபி
　ராமாவென்றுன்னைநா னம்பினேனே. (௮)

திடத்திடனின்னடிமையெனச் சேர்ந்தவென்னை
　செகமதனிற்றீயர்தம்பாற் சேர்த்திடாமல்
கடத்தயிராபதமிகராங் கஜேந்திரன்றன்னை
　காத்ததுபோலேழைதனைக் காருமையா
விடபத்தின்மேற்றுயிலும் விபுதர்கோவே
　வெயிலொளிபோலுன்பாதம் விளங்கச்செய்வாய்

கடத்தைகணைப்பொருத்தாளுஞ்செயகோதண்ட
ராமாவென்றுந்தனைநானம்பினேனே. (௯)

அன்னைதந்தைகுருதெய்வநீயேயென்று
அனுதினமுமுனைப்பணிந்தேனடியேன்வாயாற்
சொன்னமொழிதவறுமல்வரந்தந்தாள்வாய்
தோத்திரமாய்க்கவிமாலைபத்துஞ்சொன்னேன்
கன்னல்மொழிலட்சுமியும்களபமார்புங்
கரமதனிற்றிகிரிசங்குங்கருடன்மீதில்
நன்னயமாய்வந்தெனிருகண்முன்றோன்ற
ராமாவென்றுந்தனைநானம்பினேனே. (௰)

இராமப்பத்து-முற்றிற்று.

கருடப்பத்து.

நேர்துறை.

ஈயாதலுத்தரை நான்போயடுத்து யிளகிமனம்
பேயாய்ப்பிறந்துலைந் தென்னுளும்வாடிப் பிதற்றுகின்றேன்
மாயாப்பிறவி மயக்கறுப்பாயுன்னை வாழ்த்துதற்கு
நேயாய்க்கருடன் முதுகேறிவந்தென்னை யிரட்சிப்பையே. (௧)

தினமுமுன்னுமைத்தை நாவாற்றுதித்தென் சிந்தைநொந்து
மனமூடுருகி மயங்குவனேவஞ்ச நெஞ்சமின்றித்
தனதாகவாழ்கின்ற நின்னடியோர்க்கடித் தரணிதமும்
நினைவாய்கருடன் முதுகேறிவந்தென்னை யிரட்சிப்பையே. (௨)

வாயேனிருந்தென்னை செய்வதுகூற்றன் வருமளவில்
ஆபோனையுன்பாத நான்பணிந்தேனிந்த வம்புவியில்
நாயேனுக்கோர்துணை வேறுமுண்டோவரி நாரணனே
நீயேகருடன் முதுகேறிவந்தென்னை யிரட்சிப்பையே. (௩)

உறியேறிபால்வெண்ணெய் கையாலெடுத் தோடியுண்ட
பொறிசேர்கலபப் புயாசலனேநெறி போக்கியபொய்ச்
சிறியேனைநின்னபர் தொண்டனிற்சேர்க்கத் திருவடியாம்
நெறியேகருடன் முதுகேறிவந்தென்னை யிரட்சிப்பாயே. (௪)

நீரேழுலகினி னின்னையல்லாம லெனக்கனிதாய்
பாரோர்புகழ்தெய்வ நான்பணியேன் பணியாதனனே
சீரோர்பொருந்து வடியார்கள்போற்றத் திருவுடனே
நேரேகருடன் முதுகேறிவந்தென்னை யிரட்சிப்பாயே. (௫)

சனந்தானில்லாரைக் காசுகொடாத கசடரென்னை
சினந்தேரிதம்வகை செப்புகின்றாருன் செயலறிந்து

மணந்தானிரக்கங் கொளாதவுறுகணன் வாடுமிடர்
நினைந்தேகருடன் முதுகேறிவந்தென்னை யிரட்சிப்பையே. (௬)
ஓதிபெருத்தாலென்ன வுத்திரந்தானுக் குதவியுண்டோ
கதிமறுத்தென்னை கருப்பையுற்றேன் கமலக்கண்ணனே
மதிகொடுத்துன் றிருநாமந்துதிக்க வரமருளும்
நிதிபடைத்தோய்கருடன் மேலெழுந்தென்னை யிரட்சிப்பையே. ()
துக்கப்பயிர்வினை யும்மனத்தோட்டாற் றேற்பையுளும்
விக்கலுங்கக்கலு முக்கியமாம்வினை யென்லுயரம்
புக்கிடமின்றிப் பொடியாகச்சாய்க்கு நற்சிறகை
நெக்குங்கருடன் முதுகேறிவந்தென்னை யிரட்சிப்பையே. (௮)
இரைந்தேயுனது திருநாமந்தன்னை யிரவுபகல்
கரைந்தேமனது கவலைவிண்டேனென்னைக் காத்தருள்வாய்
விரைந்தேவருக விதுவேளைவேளை வெதும்பமணி
நிறைந்தேகருடன் முதுகேறிவந்தென்னை யிரட்சிப்பையே. (௯)
மத்தகத்தானையின் வாய்திறந்துன்பெயர் வாழ்த்தருள
வித்தகத்தாழி விடுத்தளித்தோய்வினை யென்பவத்தை
சித்தமதிற்பொறுத் தெந்தனையாளத் திருவுடனே
நித்தங்கருடன் முதுகேறிவந்தென்னை யிரட்சிப்பையே. (௰)

கருடப்பத்து-முற்றிற்று.

போற்றிப்பத்து.

நாரணாபோற்றிபோற்றி நரசிம்மரூபாபோற்றி
காரணக்குருவாய்வந்தென் கவலையைத்தீர்ப்பாய்போற்றி
வாரணந்தன்னைக்காத்த மாதவாபோற்றிபோற்றி
சீரணிந்திரங்கிவாழும் ஸ்ரீரங்கநாதாபோற்றி. (௧)
வாமனரூபாபோற்றி மணிமச்சகூர்மாபோற்றி
ராமனேராமாபோற்றி நற்பதந்தருவாய்போற்றி
காமனையீன்றாய்போற்றி கபடநாடகனேபோற்றி
சேமமாயென்னையாளும் ஸ்ரீரங்கநாதாபோற்றி. (௨)
செங்கண்மாலரியேபோற்றி திருமகள்கொழுநாபோற்றி
சங்கணிகாத்தாய்போற்றி தரணியையளந்தாய்போற்றி
இங்கெனக்கருள்வாய்போற்றி எந்தையேபோற்றிபோற்றி
திங்கள்சேர்வதனாபோற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி. (௩)
அகலியைக்கருள்வாய்போற்றி யாக்கரைவதைத்தாய்போற்றி
முகினிறத்தானேபோற்றி மூர்த்தியேபோற்றிராஜ
மகனெனவந்தாய்போற்றி மாயசெவ்வாயாபோற்றி
ஜெகமுண்டநாதாபோற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி. (௪)

பஞ்சவர்கள் தூதாபோற்றி பாருளகளந்தாய்போற்றி
வஞ்சனை தீர்ப்பாய்போற்றி வாலியைவதைத்தாய்போற்றி
தஞ்சமென்றோரைக்காக்குஞ் சாரங்கபாணிபோற்றி
செஞ்சிலைக்கரத்தாய்போற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி. (௫)

அரிரகுராமாபோற்றி அடியவர்க்கெளியாய்போற்றி
கரிதனைக்காற்றாய்போற்றி கஞ்சனைவதைத்தாய்போற்றி
விரிகடற்றுயின்றால்போற்றி விளங்கனியெரித்தாய்போற்றி
செருவினைவென்றாய்போற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி. (௬)

மாயனேபோற்றிபோற்றி வரமதுதருவாய்போற்றி
ஆயனேபோற்றிபோற்றி யடியனுக்கருள்மீக்கொண்டு
தாயனேவருவாய்போற்றி தசரதராஜனீன்ற
சேயனேபோற்றிபோற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி. (௭)

எந்தையேபோற்றிபோற்றி யிமையவர்க்கரசேபோற்றி
சிந்தையிற்குடியாய்க்கொண்ட தெய்வமேபோற்றிபோற்றி
பந்தம்வேரறுப்பாய்போற்றி பரப்பிரம்மவடிவேபோற்றி
செந்திருமார்பாபோற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி. (௮)

முத்தணிமார்பாபோற்றி மூவுலகளந்தாய்போற்றி
இத்தலம்மீன்றாய்போற்றி யேழைபங்காளாபோற்றி
பத்தர்கட்கரசேபோற்றிப் பாசம்வேறறுப்பாய்போற்றி
சித்தம்வைத்தென்னையாளும் ஸ்ரீரங்கநாதாபோற்றி. (௯)

இருவினைதுளைப்பாய்போற்றி யேகமானவனேபோற்றி
திருவொறுகருடனேறுந் தேவனேபோற்றியுண்பா
லுருகியானுரைத்ததோத்ர மூலகளந்தவனேபோற்றி
திருவடியெனக்குநல்கும் ஸ்ரீரங்கநாதாபோற்றி. (௰)

போற்றிப்பத்து-முற்றிற்று.

பரப்பிரம்மப்பத்து.

என்னால்முடிந்ததிதுநாள்வரைக்குமிரவுபகல்
சொன்னேன்தமிழின்வழியாகவெந்தன்துயரமெலாம்
இன்றுநானதுவருணல்குவாயெளியேன்றனக்கு
பன்னாகமேபற்றுயில்சீதாபிராமப்பரப்பிரம்மமே. (௧)

எத்தனையோவுருகோடானகோடியெடுத்தனுத்தப்
புத்திமயங்கியுன்பாதாரவிந்தப்பொருளறியா
தித்தலந்தன்னிலுழல்கின்றநாயினிந்தன்மைவழிப்
பத்தனைக்காத்திடுஞ்சீதாபிராமப்பரப்பிரம்மமே. (௨)

செங்கமலத்திருமார்பழகாவுன்றிருவடியை
மங்களமாகப்பணிந்தேனுளத்துணைவாழ்த்திநின்றேன்
இங்கிதமாகவருள்நல்குவாயெளியேன்றனக்கு
தங்கையஞ்சேர்பதசீதாபிராமப்பரப்பிரம்மமே. (௩)

மின்னார்க்கொடியிடைவேல்விழிமாதரைமேவிநித்தம்
பொன்னுக்கலைந்துணைப்போற்றுமநாலைப்புவியுகுத்தேன்
இன்னிலந்தன்னியருள்நல்குவாயெளியேன்றனக்குப்
பன்னுதமிழ்க்கருள்சீதாபிராமப்பரப்பிரம்மமே. (௪)

மச்சகூர்மவராகநரசிம்மவாமனனை
அச்சுதநாமத்தரிகிருஷ்ணனையான்பணிந்தேன்
இச்சையதானவருநல்குவாயெளியேன்றனக்கு
பச்சைநிறமுள்ளசீதாபிராமப்பரப்பிரம்மமே. (௫)

இந்திராதிபோற்றியபொன்னரங்கேசனிணையடியைச்
சொந்தமதாகவேதான்பணிந்தேனிந்ததொல்லுலகில்
எந்தையுன்மைந்தற்கருணல்கியாண்டிம்மைதந்து
பைந்தமிழும்புனைசீதாபிராமப்பரப்பிரம்மமே. (௬)

சுருதிமொழிந்தமுறைப்படியுன்னைத்தொழுதிரஞ்சிக்
கருதிமுக்காலமுங்கைகுவித்தேன்றகதிபெறவே
இருவினைதீரவருள்புரிவாயெளியேன்றனக்குப்
பருதிகுலத்துற்றசீதாபிராமப்பரப்பிரம்மமே. (௭)

பாத்தலராகியமங்கையராசையுமாமயக்கந்
தீத்தவனேயென்னுருவொழித்தாய்திருவேங்கடவா
ஏத்தத்தாயடியார்த்தருணல்குமிருவிழியாற்
பார்த்தெனைக்காத்தருள்சீதாபிராமப்பரப்பிரம்மமே. (௮)

வையகந்தனிற்பையைஈயாதலோபியர்வாசல்சென்று
பொய்யுறைசொல்லிப்புகழ்ந்துறவாடிப்பொரிந்துரைத்தேன்
ஐயனேயுந்தணருனல்கியாண்டருளாயிரம்வாய்
பையரவிற்றுயில்சீதாபிராமப்பரப்பிரம்மமே. (௯)

வேண்டுகிலேன்மண்ணில்வேந்தர்தம்வாழ்வுபத்தரசெல்வம்
நீண்டபொன்னேன்முடியிந்திரப்பட்டமும்நித்தியமாம்
ஆண்டவனேயுன்னடியார்க்கடியவனாகவருள்
பாண்டவர்நேயாசீதாபிராமப்பரப்பிரம்மமே. (௰)

பரப்பிரம்மப்பத்து-முற்றிற்று.

ஸ்ரீ

குருவிருத்தமாலை.

பொன்னாசையும்பூமியாசையு
மின்னாசையும்வேண்டிவிரும்பிலேன்
சொன்னகான்றொடருமக்காலையில்
உன்னலுன்பதமுள்ளத்துறுகியே (க)

வாவிதன்னில்வனமொண்டகுமண்டம்
தாவிலோரிடம்தங்கியவாறுபோல்
ஆவலாவியுடலுமுன்னணையே
மேவிவோர்நிலைவீடருணாதனே. (உ)

இரும்புனேசம்மெனுமனத்தீயரை
விரும்பியான்றுதிமேவதனீதமோ
சுரும்புமொய்க்குந்துலவணிமாலையாம்
அரும்பொன்னுடையரிகரிராமனே. (ங)

கடலுப்புநற்கலக்ககாயுதே
குடனிசைந்திடலுண்பாரவ்வாறுபோல்
உடநல்லுயிரூழ்வினைப்பாலதாம்
அடிமைசெய்தெனையாட்கொள்ளவேண்டுமே. (ச)

கள்ளவைம்புலக்கள்ளகசடரை
மெள்ளவிட்டுவெளியிற்பிரிந்துயான்
உள்ளமானவொருவனைக்கண்டசீர்
வள்ளலென்றுவணங்கருள்செய்வாய. (ரு)

பூமிதன்னிற்பொருந்தினரைத்திரை
சாமியென்றுரைசாற்றலுனீதியோ
நேமிகையுளிறுத்துவச்சஸ்தல
சாமிநம்பினன்றுமரைதாளையே (சு)

உனைவணங்கவுரித்தென்னுடற்கரம்
வணமிங்கும்வகையுளதேவையா
தினமிப்படிமந்தைசிதறினற்
கனவிலுன்னையுங்காண்பனோகர்த்தனே. (எ)

ஓங்கலமுமிதின்றிடிலோரவல்
நேர்கிடைக்குமெனுமொழிநிச்சயம்
சீர்பதத்தைத்தினந்துதிசெய்தனன்
கார்வண்ணக்கண்ணாகாத்தருளெந்தையே. (அ)

என்னசொல்லியுமீவிரக்கமில்லை
வன்னநெஞ்சாகிமனமிருப்பானகில்
அன்னமேறுமயன்செயலல்லது
பின்னையனென்றும்பேசுவதில்லையே. (கூ)

படிக்கலாந்திருநாமத்தைப்பாடியே
நடிக்கிலாமுன்னுடைகக்கூத்தையே
பிடிக்கலாமின்னடியார்பொற்றாளையே
இடிக்கலாமனதொடுக்கமதில்லையே. (௧0)

உன்னையன்றியுலகினில்வாழ்பவர்
தன்னைநம்பத்தகாதுகண்டாயினி
அன்னையாயெனையாதரியாவிடில்
பின்னையார்துணைபேசப்பிராமனே. (௧௧)

தாயுந்தந்தையுஞ்சற்குருதெய்வமும்
நீயல்லாதென்றனெஞ்சினில்வேறுண்டோ
சேயன்றீவினையாரச்செயாவிடில்
மாயனேயுன்மகிமைக்குறையுமே. (௧௨)

ஆக்குந்தீவினைநோக்கணுகாமலே
காக்குந்தெய்வக்கருங்கடல்மேனியாய்
ஏக்கமாமெனையின்பம்வைத்தருளுவாய்
தீர்க்கமாஞ்சகநாதஸ்ரீராமனே. (௧௩)

வாடிச்சிசோம்பிவதங்கும்பிரியனும்
கோடிப்பொய்யுநல்லூரியம்போலவே
தேடினின்றுதிளைக்குமெளியனை
நாடிக்காக்குநாராயணனுமனே. (௧௪)

கண்ணுமூக்குஞ்செவியும்கைகாயமும்
உண்ணும்வாயுமூடற்றதுவநிலை
நிண்ணிடும்படிநின்னருள்செய்குவாய்
மண்ணும்விண்ணுமனந்தருள்மாயனே. (௧௫)

வாக்குநெஞ்சுமனமுங்கலக்கவே
ஆக்கிரமத்தேன்முனந்தகம்வாதிடில்
சீக்கிரமத்திற்றிருவுடன்றோன்றியே
காக்கவேணுங்கருங்கடல்வண்ணனே. (௧௬

வாசமாமலர்மான்மதங்கொண்டுனைப்
பூசைசெய்துபுகழ்ந்துறையாமலே
தேசமோசதிருக்கிலலைந்துவீண்
மோசம்போனேன்முகாரிமுகுந்தனே. (௧௭)

காந்தமூசிக்கலக்கும்புணர்ப்பென
மாந்தர்வாழ்க்கைமயக்கத்திலாழ்ந்தனன்
பாந்தமாகப்படித்திடுமாயநோய்
தீர்த்திடச்செயுந்தீனதயாளுமே. (௧அ)

வெக்கமாகியபாசவேரற்றிட
தக்கபேரருள்தந்தனையாளுவாய்

இக்குவேலையுமீன்றனற்றந்தையே
திக்குவேறில்லைஸ்ரீரங்கநாதனே. (௧௯)

எந்தனுள்ளத்திருத்திநின்சீரடி
சிந்தையாரத்தெளிந்துகொள்ளாமலே
பந்தமாகியேபாசப்பிணிப்பினேன்
எந்தநாட்கரையேறுவனெந்தையே. (௨௰)

நீங்கியாயுளோநித்தமும்தோற்றியே
சாதிவாயுதவிர்ந்துலப்பெற்றிலேன்
ஆதிமூலமென்றியானையழைத்தநாள்
ஓதும்வார்த்தைதமுன்னோடியமாயனே (௨௧)

போற்றிசெய்துனைப்பூதலத்தோரெல்லாந்
தோத்தரித்துதுதிக்குநற்றெய்வமே
கூற்றனென்னுயிர்கொள்ளைகொளாமுனம்
காத்திடக்கடன்கார்நிறவண்ணனே. (௨௨)

உரிமையெந்தனுக்குன்பதமல்லது
பொருமைநேரும்பிரபஞ்சமில்லையால்
கருவினைசைகடக்கவெனக்கருள்
திருவளஞ்செறிசீதைமணாளனே (௨௩)

நாளுங்கோளுந்திதியுண்டசேந்திரம்
தேளும்பாம்புஞ்சிறுமையும்பிணவியும்
வாளுமாமறவிக்கெயிற்பாசமும்
மாளதந்தென்னையாளுவைமாயனே. (௨௪)

தெய்வமென்றுனைச்சிந்தையிலென்னியே
கைகள்கூப்பிக்கசிந்துபணிந்தநான்
வைவன்வாழ்த்துவன்வாதைநோயெய்திலேன்
செய்வநின்னருட்சீதாபிராமனே. (௨௫)

மாநிலந்தனில்வாழ்கின்றபேயனை
கனமாகவிகட்சிசெய்யாமலே
ஞானமானறைநாடியபாதனே
மோனமாகியமுத்தியளிப்பையே. (௨௬)

மாய்கையெண்ணுமோரன்னைமறித்தனன்
சேயன்ஞானந்திரம்பின்னின்பத
சேயமாகியநேசர்க்குக்காசனே
ஞாயமோகைவிடுதல்ஜநார்த்தனே. (௨௭)

உந்தன்பொன்னடிக்கேதுந்துழையான்
எந்தநாதாகியம்பியிறைஞ்சுவேன்
நந்தகோபன்சோதைக்குளாந்த
மைந்தனேமுகுந்தாவாசுதேவனே (௨௮)

எந்நெஞ்சினிலெண்ணியவெண்ணம்
நிந்தைமானம்நிர்விக்னபாக்கியமும்
உந்தனுக்குறித்தென்றுணிபுண்மையாய்
தந்தனன்றத்தஞ்சாரங்கபாணியே. (௨௯)
என்னசெய்குவனென்றுயாதனையும்
பின்னமாப்பிணிப்பையுநோயையும்
சொன்னதுந்தன்றனையடிநாடியே
இன்னமுங்கேட்கவில்லையோராமனே. (௩௰)

குருவிருத்தமாலை-முற்றிற்று.

ஸ்ரீ

ஆதிமூலப்பத்து.

அனந்தேனமுதருந்தெய்வ மென்றற்பரைத்தமிழாற்
றினஞ்சோத்தறித்துத் திரிகின்றபேதையின்றீங்காற்றி
கனந்தேறனதுகழ லிணைபோற்றிகவலையரி
மனந்தோனெனக்களித் தாளாதிமூலமகாதெய்வமே. (௧)
பரியாசமாவுனைநாவாற் றுதிப்பதும்பன்னுதமிழ்த்
தெரியாதபேரிடஞ்சென்றுரைகாடிச் சிறுமைகெல்லால்
பரிவாயுரைத்தெந்தனெஞ்சு புண்ணாகிப்படுந்துயரம்
மரியாதையோவெனையாளாகி மூலமகாதெய்வமே. (௨)
கலையான்மயக்கியகண்ணார் வலையிற்கசிந்துருகி
நிலையானவாழ்வென்றவர்மனைக் கேநித்தநேசம்வைத்து
துலையாப்பிறவிகடற்கரையோரத் துணையுமற்றேன்
மலையாமலெந்தனுக்காவாதி மூலமகாதெய்வமே. (௩)
சொல்லாததோவுன்றிரு நாமநல்லுரைசிந்தையினி
னில்லாததோநின்றிருவடி நின்னடியார்க்குறுதி
சொல்லாததோஜகரட்சக நீதிதுடர்ந்திடின்மேல்
வெள்ளாளகண்டனு நீயாதிமூலமகாதெய்வமே. (௪)
அன்னுளிளங்கைப்பதிவாழ்ந்த ராட்சதாத்தனையுஞ்
சின்னுபின்னப்படகோ தண்டமேந்துஞ்செய்வாதா
பன்னகமேலினும்பார்கடன் மீதினும்பள்ளிக்கொண்ட
மன்னுவடியைக்காராவாதி மூலமகாதெய்வமே. (௫)
தோவென்றுனைக்குஞ்சரங்கூவுஞ் சாலையிற்கோதநரை
தாவென்றவொட்டத்தில் சக்கரத்தால்கிஞ்சகமாரணைமுன்
நீவென்றகாலமும் நீவந்தகோமுநினைந்தடைந்தேன்
வாவென்றனையழைப்பாயாதி மூலமகாதெய்வமே. (௬)
காயாதபாலுற்றவெண்ணெயைப் போலுதற்காவியத்தை
ஆயாதசொற்பொருட்பாப்போலு முந்தனருள்விரும்பி

சேயெனவத்திற்றிரிந்திளைத்தேன் மன்சேருமுன்னே
மாயாவடிமைகொளுமாதிமூலமகா தெய்வமே. (௭)

தூதாகிசென்றுமுன்னேவரைக்காத்தநற்சோதியென்றே
தேவாமுதலிந்திரன்விண்ணோரும் போற்றினர்மேதகணயான்
ஆதாரம்வெற்றிலையுன்னையல்லாதடியேற்கருள்
மாதாபிதாகுருநீயாதிமூலமகாதெய்வமே (அ)

ஓயாக்கவலைமடுவிழுந்துன் றெந்தனுள்ளமெல்லாம்
நியாகிவந்துவருகுதையோ திருவேங்கடவா
தாயாகிவந்தெனைக்காத்தருள் வாயிந்தத்தாரணிக்குள்
மாயாவதாரனுநீயாதிமூலமகாதெய்வமே. (௯)

துளபாபாணக்கவுஸ்தநளினிதுனதந்துவறத்
தளகர்நின்சீரடியான்தொழுதெனச்சுதானந்தனே
இளகாதிருப்பதென்றாழ்போக்கினின்னன்பர்க்கேவல்செய்ய
வலமாகவந்தெனைக்காவாதி மூலமகாதெய்வமே. (௧௦)

ஆதிமூலப்பத்து முற்றிற்று.

ஸ்ரீ

சிந்தையின்பத்து

கண்டாக்கால்முறைமைசொலுங்காணுவிட்டால்
கலீரென்றுபேர்சொல்லுக்கசடலோபச்
சண்டாளப்புலையர்களை அயன்சிருஷ்டித்தான்
சமஸ்தானபதிக்களன்று தரணிமீதிற்
கொண்டாடிப்பணக்காரகுபேரனென்று
கூசாமல்மாரனென்று கூறியானும்
திண்டாடியலையாமலருள்செய்தாளும்
ஸ்ரீரங்கநாதாவென்சிந்தையானே. (௧)

இப்பாரில்விளங்குபின்றநீதிதன்னை
யெண்ணிமனமுணராதயீனமார்க்கத்
தப்பானபேர்களிடஞ் சென்றுயானும்
சன்மார்க்கநெறியுடையதனவானென்றும்
ஒப்பாருமில்லையென்றுங்குணவானென்றும்
உத்தயனீயென்றுநிதமுரைக்குநாவாற்
செப்பாமலெந்தனுக்குன்னருள் செய்தாளும்
ஸ்ரீரங்கநாதாவென்சிந்தையானே. (௨)

செத்தாளுமரைக்காசுகையைவிட்டுச்
செலவழிக்காலுத்தரிடஞ்சென்றுயானும்

மற்றொருமில்லையெனக்குன்னையல்லால்
மகாராஜனேயெனதுவறுமைதீர
ஒத்தாசைசெய்திடுவாயிந்தவேளை
யுண்மையறியுடையவனேயென்றுசொல்லுஞ்
சிற்றாசையினையொழித்துள்ளருள்செய்தாளும்
ஸ்ரீரங்கநாதாவென்சிந்தையானே. (௩)

நன்மைநலமறியாதபேர்கள்கோடி
நகைவகையும்ஆடைகளுமணிந்தேகெட்டிப்
பொம்மைகள்போலிருப்பாரவர்கள்மீதில்
புகழுடையதமிழ்ப்பாடிப்பொருளைவேண்டி
இம்மைதனிலெளியேனைக்காக்கவந்த
இந்திரனேயென்றுநிதம்இறந்திடாமல்
செம்மையுடனெந்தனுக்குன்னருள்செய்தாளும்
ஸ்ரீரங்கநாதாவென்சிந்தையானே. (௪)

கற்றவர்க்குவித்தையென்னவருமையோதான்
காசுசணமெளிதோநீகருதிகேட்ட
மித்தனேபோயெங்கேவந்தாயெனக்குவேறே
பிழைப்பில்லையோவென்றுசொல்லும்பேர்மீதில்
நற்றமிழைப்பாடிநிவமலைந்திடாமல்
நன்மார்க்கவழிப்படியேநடப்பதற்கு
சித்தமதுதெளிந்திடவேயருள்செய்தாலும்
ஸ்ரீரங்கநாதாவென்சிந்தையானே. (௫)

பொல்லாததுன்மார்க்கமுள்ளபேரை
போயடுத்துமுகம்பார்த்துபுகழ்ச்சியாக
வில்லாளிவிஜயனென்றும்நல்குலனென்றும்
மேதினியைப்படைத்தளிக்கும்விமலனென்றும்
உல்லாசவில்லாளிமதனனென்றும்
உரைத்துரைத்துஅறிவிழிந்துஉலகைமீதில்
சொல்லாமலெந்தனுக்குன்னருள்செய்தாளும்
ஸ்ரீரங்கநாதாவென்சிந்தையானே. (௬)

பொய்யானபேர்களிடஞ்சென்றுயானும்
பொறுமையுள்ளதருமனென்றும்வீமனென்றும்
மெய்யானவரிச்சந்திரன்சிபிதானென்றும்
மேதினியையளந்தகுபேந்திரன்றானென்றும்
ஒய்யாரமுடையவிக்ரமார்க்கனென்றும்
ஓலைதனிலொருதியொருகவியைப்பாடச்
செய்யாமலெந்தனுக்குன்னருள்செய்தாலும்
ஸ்ரீரங்கநாதாவென்சிந்தையானே. (௭)

மோசமுடன்கொலைகளவுகாமஞ்செய்யும்
முழுமூடர்தங்களிடமுன்னேசென்று
நேசமுடன்றமிழ்பாடிப்பொருளைசொல்லி
நிச்சயமாயுந்தனிடசமுகந்தன்னை
வாசமுடநம்பிவந்தேனெளியனென்று
வயிறுவளர்த்திடுங்கருமமனதிலுன்னித்
தேசமதில்லையாமலருள்செய்தாலும்
ஸ்ரீரங்கநாதாவென்சிந்தையானே. (அ)

நப்பியிருக்கின்றோர்க்குரெண்டுபேசும்
நயமறியாவுத்தரிடம்நாடிநாவால்
சொம்புடனேபதம்பாடிப்புகழ்ச்சியாகச்
சுந்தரமாயுனைப்போலுஞ்சுவர்க்கத்துண்டோ
சம்பிரமமாயெந்தனிடவறுமைதீர
தயவுசெய்வாயென்றுசொல்லித்தமியேன்றானும்
தெம்புடன்வாடாமலருள்நீசெய்தாலும்
ஸ்ரீரங்கநாதாவென்சிந்தையானே. (௯)

மறந்தொருவேளையினிலரைக்காசுதானும்
வழங்காதலோபியர்மென்வரிசையாக
நிறந்தரசத்தமிழ்பாடிபொருளைவேண்டி
நித்தமிதுவேலையதாயலைத்துவாடி
இறந்துபிறந்திதுவரையும்திரிந்தோய்ந்தெய்தேன்
எனையாளும்பொன்னரங்காகதியென்றுற்றேன்
சிறந்தருள்சேர்தாசருடன்யானுமொப்பாய்ச்
சேர்ந்தருள்ஸ்ரீரங்காவென்சிந்தையானே.

சிந்தையின்பத்து முற்றிற்று.

அஷ்டாட்சரத் திருப்புகழ்

பூமிதனிலேபிறந்து பாலெனவேவளர்ந்து பூவையர்கள்பாலையுண்டுவருநாளில், பூசைமிகவேபுரிந்து ஆசைவெகுவாய்நினைத்து பூர்வவினையாலடைந்த பொருள்கூடி.

காமவழிகேணிவீழ்ந்து மோகமடுவூடிறங்கி கால்நிலைகொளாமலாடி மனம்வாடி, காயமமராலலைந்து மாய்விருளான்மறைந்துகாதலிபொன்மக்கள்வாழ்வபெறலாமோ.

பாமரர்கள்மாளவென்று ராமசரமேவியன்றுபாழ்படயிலங்கைதசற்ற ரகுநாதா.

பாவவினைதேடிவந்தென் நாவிவருத்திடாமுன் பாதமலர்ச்சேர அன்பு அருள்வாயே.

சேமகரமாகவுந்தன் ராமதிருநாமமந்த்ரத்யானமெனவே துதிக்கு மிடியேன்முன்.

சீதைமணவாளனென மாதவகுமுந்தஞான சீர்கருடன்மீதிலேறி வருவாயே.

வேறு.

தோகையர்வலைக்குள் வாகுடனேசிக்கி துன்பமிடுவாகி மெலியாதே, சூலைமதிவாலைவாலை சுகரோகஞ் சோகைபிணிநோய்களணுகாதே.

வேகமுடன்மன் ஆகமுரும்ஆவி மேலிடுமோர்பாசம் வரியாமுன், மோதினியிலுந்தன் பாதமலர்தந்தென் வேதையதவந்தென் விழிகாடா.

வாகைபெறுபோரில் போசசரமேவி வாளவுணர்மாயச் சிறைதீரமாதுடனயோத்தி மாதையும் அருத்தி மாமுடிபுனைந்த ரகுநாதா.
ஓகையுறுதம்பி மார்களொடும்பி யுன்னடிமைநம்பு மநுமானோடோக்குசிறைவீசுபூங்கருடனேறிஓங்கலெனவென்முன்வருவாயே.

வேறு.

அலைந்தலைந்தறிவீனரை நிதமுமா உகந்தருந்தமிழ்பாடியபதமும்அரங்கதனிலுரையாடியவிதமும் ஒருகோடி, அறிந்தமூலினர்போமேவ சதமும் பிரிந்திடாவகை போயினமதமும் அலைந்துதேய்ந்துளவென் னிருப்பதமும் குறைவாகி.

உலைந்துநானவர் பின்சென்றேடியும் இறங்கிடாரவர் தம்பொன் வாழ்வினி லுகந்துமேன்மை மிகுந்திடவாழ்பவர் குமிசெல்வம், உயர்ந்தநன்றெனை விடவேறிலை நிரந்தரமுமிது நிச்சயமென்றுட லுருண்டிடானதெருண்டபேர்களே.

குலைந்திடும்படி மேசியுமேசியும் இகழ்ந்தவேசைமேலாசையுநேசமும் குளிர்ந்தகங்கண மாதாரபாசமும் பெற்றோர்கள் குறைந்தவேழைகள் கும்பிதுளிர்ந்திட சிரங்கைநீரும் விடாமலருந்திய குரங்குதீயர்களோடுறவர்பெனைக் கூட்டாதே.

மலர்ந்தமல்லிகைமுல்லையரும்பட னிறைந்ததாமரை மாமலர்விட்டியும் மகிழ்ந்துமாமணியுந்துளவுந்திகழ்ரகுநாதா வளம்பொருந்தியபிந்திரரையானுட்ட னுளந்திருந்திய நல்லடியார்தொழுங் குவலான்வியகருடன் மேலென்புகமும் வருவாயே.

வேறு.

சாதநுணியென்றுனை வணங்கிலேன் வீணிலேமாதநீமயல் கெ ண்டுபிணி யுண்டிலேனுணிலேன் சாகாமுனேர்கொடிய சமுசார வாழ்க்கையாற் றளர்வேனே.

தூதர்களுமோலையோடு ஓடிவந்தாரிதோ மாதரின்மக்களுடன் மேல்விழுந்தாரரையோர் சூசினைகடெரியாமல் மாறிபோலன்கணீர் சொரிபோதில்.

ஆதாவதாயண் டயார்வந்துகூடியே மாதர்மனைமக்களை நினைந் து நீரோடிய வாடுமுடிபாடென வுடந்தையாய்நாடியே அரைச்சாவி.

பேதமனையாள்தொடப் பிள்ளைநானென்றிடப் போதமஸ்யத் தப்பிரதேகந் தழைத்திடப் போயெனவஸ்தைப் பெருதுகடன்மீது வருவாயே.

சடம்சட்டாலி பிறக்குமுன்னேகுருகூரெனச் சேஷமமினுக்கு முன்னே நாடிதவறிப்போய்நிலை தாண்டுமுன்னேமுறை புறவோர் கள்.

இடம்விட்டொருவிச் சேருமுன்னே யென்சடனைக்கண்டுசெவிக்கு முன்னேமுடி யிடையிற்றேயிலழுக்குமுன்னே பறைபொலியோடே.

யடிப்பாடை யெடுக்குமுனேவழி முடியப்பொரிகளின் கருமு னேகடி படியுமாசனம் போகுமுனேகூட மீதேற்றி.

குடமிட்டறுங்குற்று முன்னேகடு தலையிற்கொள்ளி நாட்டுமு ன்னேகல குலெனமூண் டெரியுமுனேநீ யருள்வாயே.

அஷ்டாட்சரத்திருப்புகழ் முற்றிற்று.

அலமேலுமங்கைத்தாயார்பேரில் பதிகம்.

நேர்துறை.

சூதேவிளைகின்றமின்ஞர்கள்செய்யுந்தொழிலதனுல்
வாதேபுரிந்துமயங்குவனேவிந்தமானிலத்திற்
றீயதேகற்றுந்திருவேங்கடேசனைச்சேர்ந்தருளும்
மாதேறரியக்குடியலர்மேன்மங்கைமாமகளே. (க)

ஊனேமிகுந்திடுமங்கைபராற்சிந்தியுள்ளமட்டும்
நானேதவிக்கஞாயமுண்டோநற்றுலவலங்கற்
றேனேகவழுந்திருவேங்கடனைச்சேர்ந்தருளும்
மானேயரியக்குடியலரகுடியலர்மேன்மங்கைமாமகளே. (உ)

பயமேவிளைக்கு நமமெனச்சொல்லுங்கட் பாவையரால்
துயரேமிதந்துலை யாமலுனைத்துதி சொல்வேனோ
ஜெயமேகிளைக்குந் திருவேங்கடசனைசேர்ந்தருளும்
மயிலேயரியக்குடியலர்மேன்மங்கை மாமகளே. (ந)

உடனேபலபல வாயெடுத்தோய்ந்துன்னுபயபதம்
படமேகதியென்று யான்பணிந்தோனிப் பரப்பதனிற்
றிடமேகொடுக்குந் திருவேங்கடனைச்சேர்ந்தருளும்
வடியேயரியக்குடியலர் மேன்மங்கைமாமகளே. (ச)

சருவூர்புகுந்து குடியாயிருந்திந்தக் காசினியில்
இருமாதவஞ்செய்து நான்வளர்ந்தேனின் னருணல்குவாய்
திருவேசிறந்த திருவேங்கடேசனைச் சேர்ந்தருளும்
மருவேயரியக் குடயலர்மேன்மங்கைமாமகளே. (ரு)

நிலையானவாழ்வென்று னீயிருதாளையென் னெஞ்சில்வைத்து
அலையாதிருக்கவரமருள்வா யிந்தவம்புவியில்
சிலையைவளைத்த திருவேங்கடேசனைச்சேர்ந்தருள்வி
மலையேயரியக் குடியலர்மேன்மங்கைமாமகளே. (சு)

விதியாறலைந்திடு ஜன்மாந்திரத்துவினைப்பயனால்
கதியேபெறும லலைந்தலைந்தே னுன்கருணைசெய்வாய்
நிதியேதொடுக்குந் திருவேங்கடேசனைநேயமுறு
மதியேயரியக் குடியலர்மேன்மங்கைமாமகளே. (எ)

அகமேமகிழ்ந்துன் னடிபணியாமலரிவையர்தஞ்
சுகமேமதியென்றுறுகொடியேனிந்த தொல்லுலகிற்
புகழேவிளங்கு மிதுவேதனுகியபூபதிக்கு
மகளேயரியக் குடியலர்மேன்மங்கைமாமகளே. (அ)

தாழ்வேகொடுத்தெனைச் சஞ்சலத்தாழ்த்துஞ்சமுத்திரத்தில்
வீழ்வேன்றடுத்தெனை யாட்கொண்டிரச்சியு மெய்பொருளே
ஆழ்வார்பணியுந் திருவேங்கடேசனகனிறைந்த
வாழ்வேயரியக் குடியலர்மேன்மங்கை மாமகளே. (கூ)

தாயேயுனையன்றி யெந்தனுக்கோர்துணை சற்றுமில்லை
நீயேமனுவென்று தந்தருள்வாயஷ்டலட்சுமியே
சேயெனையாளவிம் வேங்கடமாலுடன் சேதிசொல்லி
மாயாமறகாத்தருள்வா யலர்மேன்மங்கைமாமகளே. (ய)

அரியங்குடி

அலுமேலுமங்கைத்தாயார்பேரில் பதிகம்

முற்றிற்று.

நேரிசைவெண்பா.

பொன்னரங்கர்சந்நிதியிற் பொங்குவளம்கண்டோர்
தன்னைச்சன்மம்பிணிகள்சாராது-இன்னிலத்தை
ஆள்வார்சுகம்பெருவா ரண்டபின்னும்பொன்னுலகில்
வாள்வாரவர்க்குமரம். (க)

இவ்விடத்திற்றானே இருக்கவென்றாலே-னெட்டான்
அவ்விடத்தில்வாழ்க வயனெட்டான்எவ்விடத்திற்
போடுவேன்பொய்யுலேம் போக்கடித்துபொன்னரங்கா
நாடுவதென்றுன்னையேநான். (உ)

நாவென்றவாணவத்தை நரசமுரச்செய்தடிமை
தானென்றனையுன்றன் றாண்மலர்க்கீழ்-ஞானமுறக்
காத்தவனமாற்றெரிய காமவினையத்தனையுந்
தீர்த்தவனேநற்கெதியைச்செய் (ங)

எண்ணுதுவெண்ணமெல்லாமெண்ணியெண்ணியேழையிரு
கண்ணுவிசோரக் கரைவானேன்-விண்ணுடர்
வந்துநிதம்வந்திக்கு மாதவனேமாகையினேன்
சிந்தையறிந்தென்னையாட்செய். (ச)

தீவினைப்போல்நல்வினையாஞ் செனமப்பயமகலு
மாவினைமுன்காத்த வந்தாயோ-ஆவலுடன்
சேட்டாங்கமாகுந் திருமந்திரமுரைத்துச்
சாஷ்டாங்கமாய்ப்பணியத்தான். (ரு)

தீராவினைதீர்க்குஞ் செல்வப்பொருள்சேர்க்கும்
ஓராசிரத்தி னுரைந்திருக்கும்-நேராக
உபயகாவேரியிடை யுற்றரவினித்தரைகோ
ளபயவரத்தனடி. (சு)

ஆசனமுற்ற தோலுதிரமென்புநரம்சீயு
மானவுடற்சதமென் றுசையாம்-மாநிலத்தில்
நம்புவதுஞாயமோ நாராயணாகமலச்
செம்மத்தைநீகிருபைசெய். (எ)

நேரிசைவெண்பா முற்றிற்று.

இராமர்பேரில் பதம்.

இராகம்-நீலாம்புரி

பல்லவி.

ஊழ்வினைகளென்னைவந்தணுகாமலே உதவிசெய்ராமா

அநுபல்லவி.

பாழிலேமனுமென்னைத்தொடராமலே பதருள்சார்வபூமா நல்ல
வரமருளபரந்தாமா தசரதனருளிய ராமா(ஊழ்)

சரணங்கள்

தாவுமூதண்டசராசரமெங்குஞ்
சரியாய்நிற்பெரி யோனேஉந்த
நாபிக்கமலமதிலோகம்பதிநான்கு
நல்குமெழிற்கரி யோனேபொல்லாத
தீவினைகளென்னசெய்தேனோநான்
பூர்வசென்மத்திலேயறி யேனே இந்தப்
பூவுலகில்வந்துபாதம்வணங்கப்
பொரிந்திலேநான்சிறி யேனேபச்சை
ஆலிலைமேற்றுயில் வோனேஒருக்
காமறக்கறி யேனே(ஊழ்)

மாதவனே அரிகேசவவைகுண்ட
வாசம்விட்டுபுவி மேலே போக
ஆதரவாகத்தசரதபுத்திர
னாகவந்தவன்பி னேலேஇந்தப்
பூதலமெய்க்கவேராசரைவென்ற
பூந்துளவமணி மாலேநிதம்
சீதாபிராமனென் றனுதினமறவாமல்
தியானஞ்செய்வேனேவீ ணேலே கிருபை
தென்புடன்செய்யொருக் காலேதிவ்விய
சம்பிரமாம்நெடு மாலே(ஊழ்)

சித்தனேசனேரங்க தாமனேகிருஷ்ணனே
தேவாமிகுந்தனே ராமாஎந்தன்
அத்தனேகோவிந்த அச்சுதாநந்தனே
ஆரணக்கூருயிர நாமச்சுத்த
பொற்றலம்போற்றவே கருடன்மேல்வந்தெனை
யுகந்தருளும்புய வீமாஉந்தனை
பக்தன்பஞ்சாட்சரப்பேருள்ள தாசன்
பணிவிடைகொண்டருள் சோமாஉன்மேற்
பாரமரட்சிப்பது வீண் போமாகோதண்ட
தீரனேசீதாபி ராமா(ஊழ்)

பதம்-இ-ட-சங்கராபரணம்,

வேண்டாமையாயித்தஜனனம்-ஒருக்காலும்
வேண்டாமையாயித்தஜனனம்.

அநுபல்லவி.

வேண்டாமையாமணித்தூண்டா விளக்கன
விந்தகனுமைபரீக்ஷத்தமயேயவ்வரன்
மெச்சிமகிழ்ந்திடுமெச்சுதமேகநிறம
பச்சைவண்ணப்பரந்தாம வெண்மேற்பிழை (வேண்டா)

சரணங்கள்.

க. பஞ்சபூதமைந்துஞ்சேர்ந் துடலாயித்தப்
பாரிலலைந்திரைதேடி கொஞ்சிக்
கொஞ்சிமொழிமாதரை கூடியாடி
குலவிதமன்வர வாடி
நெஞ்சிலறிவில்லாமல் நினைவுதமொழிபே
கெஞ்சிக்கெஞ்சியிதக் கிலேசம்படுமனம் (வேண்)

உ. ஒன்பதுவாயுள்ள கோட்டை-பூட்டில்லாம
லோரிகரியாடும் வேட்டை-அதில்
செம்பொன்மணிவைத்து நட்டை-யுருக்கொண்டு
திருவடியழிப்பாய்கல் வீட்டை
சம்பிரமாகவுநதன் றய்கில்லாவிடில்லாய்ந்த
துன்பசாகரத்தைத் துணைபற்றுளனீந்த (வேண்)

ங. நீர்மேற்குமிழியான காயம்-இதைநம்பி
நிசமென்றிருக்கி லபாயம்-இந்தப்
பார்மேலுடைய நேயம்-தயியன்மேற்
பட்சம்வைத்தருளும்சகாயம்
கார்மேனியான கரிவரதேந்த்ரா
சீர்மேவுந்தேவர் கொழும்ராமச்சந்த்ர (வேண்)

பதம்-இ-ம-ஆஹிரி

பல்லவி.

இனியென்னுலாக தையா-உன்னைத்தேட
இனியென்னுலாகாதையா

அநுபல்லவி.

இனியென்னுலாகாது முனிவர் பணியுமேசா
இஷ்டகாமியக்கருமஅஷ்டலட்சுமிவாசா (இனி)

சரணங்கள்.

க. பாற்கடலில் குடியோ-பரமபதம்
பச்சைமாலிலையடியோ
ஏற்றுப்பணு முடியோ-தேவரைக்கண்
டிணங்குவதெப்படியோ
மாற்கமதாகவேவந்தெனையாட்சித்துக்
காக்கக்கடனுனக்குகார்மேகவண்ணனே (இனி)

உ. தோத்தரிப்பார் குழ அயோத்தியில்
துணிந்தய்யா சாள
யாற்றியென்வினை மாளகிருபைசெய்து
மகிட்சியாயெனை யாள்
காற்றடிக்கத்தாழை பூத்திசீருயமே
சேத்திரந்திறந்தென்னைக்காத்தருள்மாயனே (இனி)

௩. வேலைபடைத்தபரனே இமையோர்கள்
வேதனைதீர்த்தசரனே
வாலேசகோ தானே-திருத்துள
மாலையணிந்தவானே
ஆலயில்ல·ஒருக்கிலுப்பைப்பூச்சக்கரை
ஆமா·நீசெய்கிறபுதுமையுனக்கக்கரை (இனி)

பதம்-௩-ம்-பூகாரி.

பல்லவி.

தரிசிக்கவேணும் ஸ்ரீராமனை
தரிசிக்கவேணும் ஸ்ரீரங்கனை
தரிசிக்கவேணும் ஸ்ரீநிவாசனை
தரிசிக்கவேணும் ரகுநந்தனைத்

அநுபல்லவி.

தரிசிக்கவேணும்நல்ல பரிசுத்தமாகிய
ஸ்ரீரங்கநாதனைப் பரமரங்குமவாழ்பவர் (தரி)

சரணங்கள்.

க. சாஸ்திரமாறுடன் பதினெண்புராணமுங்
தத்துவங்கொண்ணூற்றாறுங்கனிநான்குவேதமும்
மாற்றியவனுவுடைய கீர்த்தியையுலகத்தில்
வாழிருந்திடும்படி பிரணிபன்செய்திட
நற்றிசையிலுன்னை தோத்திரமாய்ப்போற்ற
நரசிம்மரூபமாய் உரங்கொண்டவனுயிரை

கேட்டிபதக்கவே கூற்றுவன்போற்கொன்ற
நீலநிறமுள்ள பாலின் திருவடி. (ஹரி)

௨. அண்டருமுனிவரு மெண்டிசையோர்களும்
அரக்கரும்பாவியிற் பொறுக்கமுடியாமல்
தெண்டனிட்டுன்னைப் போற்றிவணங்கிடத்
தேவர்முனிவர் துன்பம் யாவையுந்தீர்க்கவே
மண்டலத்திலயோத்தி ராசன் தசரதன்
மைந்தனென்றுதித்த சித்ரவில்லினாற்
கண்டகனாகிய ராட்சதரை வென்ற
கரியமாலாகிய அரியின் திருவடி. (ஹரி)

௩. கஞ்சமலருதித்த மாமன் கஞ்சனுக்காகக்
கபடநாடகருடன் கலியுகத்தினின்மனம்
வஞ்சகப்படமாய் மருவியகிருஷ்ணனைப்
வந்துவல்லவனென்று பந்துபல்லோர் துதிக்க
பஞ்சபாண்டவர்கள் பாரதப்போர்செய்யப்
பார்த்தசாரதியாகிக் காத்தருளியதேவா
செஞ்சொன்மொழிந்திடும் பஞ்சாக்ஷரதாசன்
சேயனைரட்சிக்கும் மாயகோபாலனே. (ஹரி)

பதம்-௫௰-ம்-ஆரபி.

பல்லவி.

எத்தனைசொன்னாலுங் கேளாமலிருப்ப
தென்னபாராமுகமோ.

அநுபல்லவி.

நித்திரையோ திருப்பாற்கடல்வாழ்கின்ற
நேசனேவைகுந்தவாசனே எனைப்பார்த்தனை

சரணங்கள்.

௧. மூலமோதியராமமந்திரமென்று
முறைபிசோலவேதங் குண்ணவோ-சீமெத்தப்
பாவங்கள்செய்திட்ட பேயன்ராமாவென்று
பரமபதத்துற்ற தென்னவோ
ஆலனுடன் செய்த வால்மீகியும்
அத்தனையுமருள் பண்ணவோ
தேவனேசீதாபிராமாவுன்னாமத்தை
சிந்தையில்நானிதமுண்ணவோ (எத்தனை)

௨. விண்ணுடர்மகிழ்பெற ராட்சசப்பூண்டெல்லாம்
வேரோட றுத்தசரக் கையா-இந்த
மண்ணுண்டராஜர்கள் ராமாயணமென்று
வாசித்துப்பெற்றபேறு பொய்யா
கண்ணாக்கண்டுன்னை ரங்கஸ்தலமென்று
கவிஞியோர்தொழு மெய்யா
எண்ணுநுந்தனடியையென்றெண்ணி
யிரங்காதிருப்பதென்னையா (எத்தனை)

௩. ஆரணனிந்திரன்யாவரும்போற்றிய
அஷ்டாக்ஷரமுள்ள மந்த்ரா-வெற்றி
வாரணந்தன்னை மடுவினில்ரட்சித்த
வல்லவனேமாய சுந்த்ரா
காரணமாகவே ஆலிலைமேற்றுயில்
கபடநாடகமுன் தந்த்ரா அரி
காரணனேயுந்தன் திருவடியேகதி
நாளணிந்தேன்ராமசந்த்ரா (எத்தனை)

பதம்-இ-ம்-இரேகுபதி.

பல்லவி.

ஐயனேஸ்ரீராமா இந்தஅவதிப்படலாமா

அநுபல்லவி.

தெய்வமென்றுனை மெய்யாகம்பிநான் தியங்கித்திரியலாமா

சரணங்கள்.

க. என்னுடைவண்ணமெல்லா
மெண்ணிப்பெய்யாய்ப்போனேனையா-கடை (ஐய)

௨. கன்னற் பாராய்ப்பெண்ணுக்
கல்லைக்கண்டாய்வழிமிற்பெய்யோ (ஐய)

௩. வந்தகப்ரூமுடன்மோசம்நெஞ்சினில்வைத்தேம அந்தப்
பஞ்சபாவிபாதேமஞ்சினேன்போதும் (ஐய)

௪. சேதிஎல்லாநீயேறிவாய்நீதிவரபபுரிவாய்ஞானச
சோதியுநீதானேயெனக்காதியுநீதானே (ஐய)

௫. தேசத்தோர்பயமொழிக்கவாசத்தார்தசரதற்கு
இராஜராமரென்னவந்தகோசலைதனபுத்திரனே (ஐய)

௬. தப்பித்துசெய்தாலுமுனையெப்படிவைதாலுமெனை
இப்பிறவிதீர்த்துன்தாசர்பொற்பதஞ்சேர்த்தாள்வாய் (ஐய)

பதம்-ஐ-ம்-புன்னாகவராளி.

பல்லவி.

அடிமைகொளுன்னை விடேன்-திருவடி
யல்லால்வேறொன்றுந்தொடேன்

அநுபல்லவி.

மகிழ்க்கஜேந்திரனை மாளாமலுயிர்க்காத்த
நெடுமாலேயுந்தன்பாத நிழலிலன்புசேர்ந்து

சரணங்கள்.

௧. ஆசைவலையை விசியேயென்மார்பில்
அழகுசந்தனம் பூசியே
பாவைபலவும்பேசியே வாழ்க்கையாய்
பழித்துமிகவும்பேசியே
கேசிக்கொன்பாதத்தை நித்தியப்பத்தியாய்
பூசித்தேனுனைவப் பெற்றேவாழ்ந்திட(அடி)

௨. அஷ்டாட்சரத்தோனே வரன்னே
ஆனந்தயாபரனே
பட்டாபிராமராமனே ஏழையா
பங்கிற்றீனதயாளனே
திட்டாந்தரமாகத் தீவினைவெர்த்தனை
இட்டாதபடியுந்தன் கிருபையைநான்பெற(அடி)

௩. தேவர்களியர்தீர வயோத்தியிற்
செங்கோல்வளங்கூற
பூவுலகுஞ்சேர தசரதன்
சூத்கலஸ்ரீசேர
ராஜ்ஜியபரம
ஆவியழித்தெர்த்த னன்னேயீட்ட(அடி)

பதம்-இ-ம்-ஆனந்தபைரவி.

பல்லவி.

தாருந்தாருமையா திருவடி-தாருந்தாருமையா

அநுபல்லவி.

பூருவம்ராக்கதர் புன்கணைகற்றலக்க
புசபலவீரனே-தசரதராமனே. (தாரு)

சரணங்கள்.

௧. மாயவஞ்சியர்வலையிற்சிக் காமலே
வம்பரிடஞ்சென்றுவாய்புதைக் காமலே
காயம்வருந்திமிகப்பரதவிக் காமலே
கனவிலுன்மந்திரந்தனைமறக் காமலே-தாரு

௨. நித்தியம்பதக்கதைகாண்கை — விடாமலே
பணிவென்போர்முகத்தைப்பார்த்துண் — ணாமலே
இத்தரையிலென்னைத்துயர்தொட — ராமலே
இக்கணமினிமேலும் — விடாமலே-தாரு

௩. வல்லிருளாகியவெல்வினை — தீர்க்கவும்
மகிழ்வாய்கருடனேறிவரவெதிர் — பார்க்கவும்
சொல்லுங்கமிழ்க்குதிரினைமிழைகளைப் — பேர்க்கவும்
சுகமாவென்றனையுன்றிருவடி — சேர்க்கவும்-தாரு

பதம்-இ-ட-பைரவி.

பல்லவி.

இதலகிலுஞ்சொல்லுவை-யே-சுபமா
யிருக்கதேபெருக்கானதே

அநுபல்லவி.

மதுருசனுஙிய மாடவன்கோபாலனை
நிதமுந்துதிசெய்து நீகதிபெறவே. (இது)

சரணங்கள்.

க. தெருவிலுள்ளகோயிலேதேடிராமென்று — மென்று
திருவிளக்கினையயிட்டுராமென்று — மென்று
மருவெடுத்துன்பதஞ்சூடிராமென்று — மென்று
வசனமபஜைசகளிபாடிராமென்று — மென்று-இது

உ. ஞானம்பொருளிவர்சேர்க்கிறரா — மென்றும்
நபமிணைபோர்களைக்காக்கிறரா — மென்றும
வனங்களனைத்தீர்க்கிறரா — மென்றும
உத்தமக்காரியமபார்க்கிறரா — மெனறும்-இது

௩. பிள்ளைக்குப்பாலபுகட்டிறரா — மென்றும
பூரணைச்சநீரனைகாட்டிறரா — மென்றும்
வெள்ளிகழுத்தாணிபூட்டிறரா — மென்றும
வெளிதசலங்களைப்பூட்டிறரா — மென்றும-இது

பதம்-இ-ட-சங்கராபரணம்.

பல்லவி

மறவாதேநீமனமே-ராமமந்திர-மறவாதேநீமனமே.

அநுபல்லவி.

மறவாதேநீமனமேமாயன்திருபதத்தை
இரவும்பகலுமநெஞ்சத்தருளஞ்சுத்தை (மற)

சரணங்கள்.

க. யானைவிரதமதி — யமபுரியாண்டாலும்
சேனைகாவலாருச் — சேவித்துநின்றாலும

தானதருமங்களைத் தவறாமல்செய்தாலும்
ஞானபோதங்களை நலமபெறவுரைத்தாலும (மற)

௨. உன்னைக்கெடுக்கநினைக்கை புரைத்துமூடியிட்டாலும்
அன்னைதந்தையர்சுகம் யாவுமடக்கிட்டாலும்
கண்ணையிட்டுக்கொள்ளை கள்ளாடித்தாலும்
விண்ணவாய்தேகத்தில் வேஷங்களைத்திட்டாலும (மற)

௩. வரதாதிதீர்த்த முழுக்குக்கிழுத்தாலும்
வேதாகமங்களை விராமமாய்க்கற்றாலும்
சூக்ஷமதுபணிகள் தேசாணுபல்லைத்தாலும
திதாகவேசனி செனமதத்தில்வைத்தாலும (மற)

பதம்-இ-ஆனந்தபைரவி

பல்லவி,

ஏன்கவலைபடுகிறாய்நெஞ்சே ராமனிருக்க (ஏன்)

அநுபல்லவி

மான்வடிவாகிவந்த மாரீசனைக்கொன்ற
மாதவர்நாமத்தை யோதிப்பதம்பெறுமல் (ஏன்)

சரணங்கள்.

௧, சற்றுந்தயையில்லாத சண்டாளருடன்கூடி
சன்மார்க்கந்தனைவிட்டு துன்மார்க்கத்தையேநாடி
ஏற்றுங்கொலைகளவை எங்கேனாமுங்கொண்டாடி
யிரவும்பகலும்மோர்சாண் குமபிக்கிரைதேடி (ஏன்)

௨. நல்லோரைக்கண்டுசாது சங்கஞ்செய்யாமற்றீதை
நாளுக்குநாள்தள்ளி நாய்போற்றிரிந்துருமே
சொல்லாதகாரியத்தை சிந்தையிற்றுணியாதே
சொன்னமாணவேதை தீமையையறியாதே (ஏன்)

௩, இகமதில்மானிடர்மேல் எனக்கென்ன அபிமானம்
எதுக்கோநிசெய்கிறாய்நீ சேதுவினில்ஸ்நானம்
பகினைபெறக்கருதிச் செய்வானேன்கர்மதானம்
வணவர்துதிக்கும்ராம மந்தரதருமேஞானம (ஏன்)

ஸ்ரீனிவாசப்பெருமாள்பேரில்

பல்லவி.

ஸ்ரீநிவாசனற்றிருவடிதரிக்க சென்மப்பிணிகள்தீரும்

அநுபல்லவி

மாநிலந்தன்னிலே வாழும்அலர்மேலு
மங்கையன்தாளனின் றங்குபங்கயர்பாவ (ஸ்ரீநி)

சரணங்கள்.

க. மச்சமுதலாக்கூர்ம வாமனவராகமும்
அச்சுத கற்கக்க வாயாசெல்வயாநல்
பச்சமால்ப் பாற்கடற் பள்ளிகொண்டருளிய
நிச்சயமுள்ளாகம் கீர்த்திவேங்கடேசனைப்-ஸ்ரீ

உ. அரிகிருஷ்ணனை மாய்ந்தகல்ய ணனைங்
கிரிதனையெடுத்தோனைங் கேசவமுகுந்தனைம
உரியேயிதயிர்வெண்ணெ யுண்டமுதுண்டோனைம்
பரிவுள்ள அடியார்கள் பக்கிலிருப்போனைப்-ஸ்ரீ

ஙு. உருவமருவமாகி உளதுமிலாதிருந
மூநுகவிழ்துளசியை முடியிலணிவதாகி
இருவினைதுடைத்தன்பர்க் கினிமையருளியாண்டு
சிறுவனுக்கருள்செய்யுஞ் சீதாபிராமனைப்-ஸ்ரீ

ஸ்ரீரங்கநாயகர்பேரில்

காட்சிபதம்- இராகம்-தோடி.

வந்துகொண்டேன்-ஸ்ரீரங்கனைச்-சிந்தைகொண்டேன்.

அநுபல்லவி.

வந்துகொண்டேன் பந்தமாசற
மாதவனாகிய ஆதிமூலந்தன்னை - வந்து

சரணங்கள்.

க. அந்தணரோதியவேத புராணமும்
ஆழ்வாரருளியபிரபந்தக் கியானமும்
சந்திரபுஷ்கரணியில்ஸ்நானஞ்செய்ய வேசமும்
சைவனைவைஷ்ணவஞ்செய்யனுஷ் டானமும்

உ. சீதளமாககருங்கற்றூண் சேர்வையும்
சிந்திக்குந்தாசர்கள்வந்தனைப் பார்வையும்
ஜோதிப்பிரகாசபீதாம்பரப் போர்வையும்
அன்பபற்றந்திவ்யதிருவடிச் சேர்வையும்

ஙு. உத்திரதேசக்கீக ஜாதிகள் கூட்டமும்
உத்தமதோர்காவினற்றவ நாட்டமும்
வெற்றிகரும்அநுமார்பரி யாட்டமும்
சேமவும்அடியவர்தீவினை யோட்டமும்(வந்து)

ஸ்ரீராமர்பேரில்பதம் முற்றிற்று.

கார்வண்ணமாலைசம்பூர்ணம்.

6

~~G~~ checked
29 6 84